விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை (02.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசாங்கம் பெறும் கடனை மக்கள் சுமக்கப் போகின்றனர்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

போர் நிறைவடைந்துள்ள போதிலும் அரசாங்கம் கடன் பெறுவதனை நிறுத்தவில்லை. அதிகளவான வட்டிக்கு அரசாங்கம் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றுக்கொள்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். கடன் மீளச் செலுத்தப்படும்போது அதிகளவான சுமையை மக்கள் சுமக்க நேரிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் பெயர் நீக்கப்பட்டாலும் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடரும்!

(கொழும்பு)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீதான படுகொலை வழக்கிலிருந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன், அதன் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் ஆகியோரின் பெயர்கள் விடுவிக்கப்பட்டுள்ளபோதிலும் ராஜீவ் காந்தி கொலைவழக்கு இன்னமும் முடிவுக்கு வந்துவிடவில்லை என இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியச் சட்டத்தின்படி சட்டரீதியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரிவித்த அந்த வட்டாரங்கள் சட்டரீதியாக முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் இன்னமும் பல உள்ளன எனவும் சுட்டிக்காட்டின.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு தமிழகத்தில் தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது (16ஆம் பக்கம் பார்க்க)



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பியினர்...

## விலைவாசி உயர்வை எதிர்த்து ஜே.வி.பி.நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொருட்களின் விலையேற்றம், அதிகூடிய வரி விதித்தல் என்பவற்றுக்கு எதிராக நேற்று காலை புறக்கோட்டை மெனிங் மாக்கற் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்திய தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல பதாகைகளை ஏந்தி ஏராளமானோர் கோஷமெழுப்பினர்.

இது தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் நாட்டில் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதோடு வரி விதிப்புகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது (16ஆம் பக்கம் பார்க்க)

## வேலையில்லாப் பட்டதாரிகள் வெயிட்டராகவும் பணியாற்றலாம்

### உயர்கல்வி அமைச்சர் ஆலோசனை



(கொழும்பு)

வேலையில்லாப் பட்டதாரிகள் வெய்ட்டர் பணிகளை செய்தாலும் தவறில்லை.நாட்டுக்கும் வீட்டுக்கும் சுமையாக இருப்பதனை விடவும் ஹோட்டல் ஒன்றில் வெயிட்டராக கடமையாற்றுவது மேல் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதியொருவர் சிறைச்சாலையில் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

விசுவமடு முல்லைத்தீவை சேர்ந்த 42 வயதுடைய குணரெட்ணம் மனோகரன் என்பவரே தன்னை விடுதலை செய்யக்கோரி நேற்றுக் காலை 7.00 மணி தொடக்கம் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள கைதியின் கோரிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 26.10.2008 அன்று விசுவமடு முல்லைத்தீவில் வைத்து பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் கைது (16ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மை கட்சிகளை ஒழிக்க பெரும்பான்மைக் கட்சிகள் திட்டம்



### மனோ கணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலம் சிறுபான்மை இன பிரதிநிதித்துவங்களுக்கு எதிராக ஒலிக்கும் எச்சரிக்கை மணியாகும் இச் சட்டமூலம் தற்சமயம் பரீட்சார்த்தமாக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ள புதிய திருத்தங்கள், எதிர்காலத்தில் மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்களிலும் கொண்டுவரப்படக் கூடிய சாத்தியம் அதிகபட்சமாக இருக்கின்றது ஜனநாயக மக்கள்முன்னணியின் தலைவர் மனோகணேஷன் தெரிவித்துள் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பு திரும்பினார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான யு.எல்.887 என்ற சிறப்பு விமானத்தில் பண்டாரநாயக்க விமான நிலையத்தை அவர் வந்தடைந்துள்ளார்.

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற 2010ஆம் ஆண்டுக்கான எக்ஸ்போ கண்காட்சியில் ஜனாதிபதி, சீனாவின் ஜனாதிபதியையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## திருட்டுக் குற்றச்சாட்டு இலங்கையருக்கு சிறை

(கொழும்பு)

டுபாயில் இலங்கையைச்சேர்ந்த இரண்டு தொழிலாளர்களுக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பணிபுரிந்த இடத்திலிருந்து பணம் திருடினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டே இத்தண்டனை இவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான இலங்கையர் டுபாய் குற்றத்தடுப்பு நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என இலங்கைக்கான டுபாய் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி குற்றவாளிகள் 2 லட்சத்து 65 ஆயிரம் தினார்களைத் திருடியுள்ளனர் என தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## யாழ்.நகரில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

சித்த சுயாதீனமற்ற சிங்கள நபரொருவர் நேற்றுமாலை யாழ். நகரில் செய்த அட்டகாசத்தால் நகரத்தில் அரை மணிநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த நபர் சத்தம் போட்டு அங்கும் இங்கும் ஓடியதுடன் பழக் கடைகளிலிருந்த பழங்களைத் தூக்கி எறிந்தும் அட்டகாசம் புரிந்தார்.

எனினும் அரைமணிநேரம் கழித்து வந்த யாழ்ப்பாண பொலிஸார் பிரஸ்தாப நபரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்








கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறைக்கு கணனி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ், பேராசிரியர் குகபாலனிடம் கணனியை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிகள் மற்றும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

# குழந்தைகள், பெண்களின் பாதுகாப்பு பற்றி 30 வருடங்களின் பின் நாம் பேசுகின்றோம்

## அமைச்சர் திஸ்ஸ உரை



முப்பது வருடத்தின் பின் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்புப் பற்றிப் பேசுகின்றோம். இதுவரை காலமும் யுத்தம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துக் கொண்டுஇருந்தோம். ஆனால் இன்று பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்புப் பற்றிப் பேசவேண்டியுள்ளது. இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இவ்வாறான பாதுகாப்பு அற்ற தன்மை காணப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த.

யுத்தத்தினாலும் அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவர் யுவதிகளுக்கான காப்பகத்தை அச்சுவேலியில் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது,

இந்தப் பிள்ளைகள் அனைவரும் எங்கள் பிள்ளைகள். இவர்களில் நாம் வேறுபாடுகள் காண்பிக்கக் கூடாது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வன்முறைகளை எனது பதவிக் காலத்திலேயே முடிவுக்குக் கொண்டு வருவேன் என உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குசட்டங்கள்கொண்டுவரவேண்டும். வெறுமனே பிரச்சினைகள் பற்றி பேசிக்கொண்டிருப்பதால் எந்தவித பயனும் இல்லை. ஒவ்[illegible]கும் பொற[illegible] மற்றும் பெண்களுக்கான வன்முறைகளை தடுக்க வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் இவ்வருடம் மட்டும் 77 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என வைத்தியர்கள் தெரிவித்ததாகவும் இதுவரையும் 300 சிறுவர்கள் இவ்வருடம் மட்டும் கல்வியை இடைநிறுத்தி உள்ளனர் என்றும் அரச அதிபர் கூறியிருந்தார்.

இத்தகைய நிலை ஏற்படுவதற்கு காரணம் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமையும் அவர்கள் தொழிலுக்குட்படுத்தப்படுவதுமேயாகும்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான வன்முறைகளை அரசாங்கம் மட்டுமல்ல; தனியார் நிறுவனங்களும் எதிர்க்க வேண்டும். இது தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும் முன்வர வேண்டும்.

பிள்ளைகளைப் பாதுகாப்பது பெற்றோரின் தலையாய கடமையாகும். அதனை அவர்கள் மிக அக்கறையோடு செயற் படுத்த வேண்டும் என அவர் தனது உரையில் தெரிவித்தார். (ச-6)



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் எழுதிய "வாழ்வின் வே[illegible]களைத்தேடி" எனும் நூல் கடந்த 25 ஆம் திகதியன்று திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

வெளியீட்டுவிழாவில் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். நூலின் முதற்பிரதியை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ், பிரதமவிருந்தினரிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# தென்னாபிரிக்காவுக்கு தமிழர்கள் சென்ற 150 ஆண்டுகள் நிறைவையொட்டி விழா

தென்னாபிரிக்காவிற்கு தமிழர்கள் சென்று குடியேறி 150 ஆண்டுகள் நிறைவடைவதை மிகப் பெரிய விழாவாக கொண்டாட அந் நாட்டு தமிழர்கள் முடிபெடுத்திருக்கிறார்கள்.

அந்த கொண்டாட்டங்களில் தென்னாபிரிக்க அதிபர் ஜேகப் ஜூமா கலந்துகொள்ள இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்கள் தென் ஆபிரிக்காவில் உள்ள கரும்புத் தோட்டங்களில் கூலிகளாக வேலைசெய்வதற்கென ஆயிரக் கணக்கான தமிழர்கள் உள்ளிட்ட பல இந்தியர்கள் அங்கு சென்றனர்.

1860 ஆம் ஆண்டு தொடங்கி 1911 வரை இப்படி கொண்டு செல்லப்பட்டவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர். இன்றைய நிலையில் தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தி ஆகியவற்றைத் தாய் மொழியாகக் கொண்ட சுமார் பதினான்கு லட்சம் இந்திய வம்சாவளியினர் தென்னாபிரிக்காவில் தற்போது வாழ்கின்றனர். அவர்களில் சுமார் பத்து லட்சம் பேர் தமிழர்கள் என்று சில புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. (ச-5)

# காரைநகரில் வியாழனன்று கலை இலக்கியப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கலாசாரப் பேரவை நடத்தும் [illegible] இடம்பெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விழாவில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதமவிருந்தினராகவும் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் இ.சிறிதரன், யாழ். பல்கலைக்கழக மொழியியல் [illegible]லத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை யோகரத்தினம் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் காரைநகர் அபிவிருத்திச்சபைத் தலைவர் க.சோமசேகரம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி க.விஜயரத்தினம், யாழ்.மாவட்டச் செயலக கலாசார உதவியாளர் செல்வி எஸ்.சசிகலா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். சிறப்பு நிகழ்வாக சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் தலைமையில் பிரதேச மற்றும் பிரதேச செயலகக் கலைஞர்களான ஈ.எஸ்.பவன், சி.கங்காதரன், த.ஸ்ரீஸ்கந்தராஜா, கா.மணிவண்ணன் ஆகியோர் வழங்கும் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ச)

தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777




# நல்லிணக்கத்தை ஏற்படுத்த மதத் தலைவர்கள் தவறிவிட்டனர்

## பத்தி எழுத்தாளர் முத்துலிங்கம் சாட்சியம்

(கொழும்பு)

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த மதத் தலைவர்கள் தவறிவிட்டனர் என சமூக அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளரும் பத்தி எழுத்தாளருமான பி.முத்துலிங்கம் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த முத்துலிங்கம், இந்தியாவில் பல இனங்கள் காணப்படுகின்ற போதும் அவர்கள் மத்தியில் இந்தியன் என்ற உறுதி காணப்படு கின்றது. இக் கொள்கையை எம்மவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். சில தசாப்தங்களுக்கு முன்னர் பாடசாலைகள் முழுவதும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்பட்டது. அன்[illegible] மக்கள் மத்தியில் பிளவுகள் கா[illegible]டவில்லை. ஆனால் தற்போது பல மொழிகள் மூலம் கற்பிக்கப்படுவதன் மூலம் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இங்குள்ள மதத் தலைவர்களை இந்தியாவுக்கு அழைத்துச்சென்று அங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கை தொடர்பாக ஆராயவேண்டும். அதனூடாக இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அரசியல்வாதிகளும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டனர்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்த ஆணைக்குழு சிபாரிசுகளை முன்வைக்க வேண்டும். இல்லாவிடில் இதுபோன்ற பல ஆணைக்குழுக்களை நியமித்து நேரத்தை வீணடிக்க முடியும் என்றார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நேற்றைய அமர்வி[illegible]வுபெற்ற மேஜர் ஜெனரல் டி.கலுபெஹன சாட்சியமளிக்கையில்,

ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தின் போது அனைத்து அமைச்சர்களையும் வார இறுதி நாட்களில் வவுனியாவிற்கு சென்று அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடுமாறு உத்தரவிட்டிருந்தார். இதற்கிணங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சு அதிகாரிகள் அங்கு சென்று பல்வேறுபட்ட விடயங்களை மேற்கொண்டனர்.

இதனால் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. இதனால் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகப் பார்வை காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு! ஆனால் ஏமாந்து போய்விடாதே" என்று சொல்வதுண்டு. நம்மில் பலர் அதிகமாக இரக்கம் காட்டி அதனால் ஏமாந்து போய் விடுகிறோம்.

நாம் மட்டுமல்ல அந்தக் காலத்திலேயே இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் பலருண்டு.

அதற்கு ஏகப்பட்ட கதைகளைச் சொல்கிறார்கள் ஆன்மீகப் பேச்சாளர்கள்.

அதில் ஒரு கதையை இப்பொழுது உங்களுக்கு சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

காட்டில் ஆச்சிரமம் அமைத்து ஒரு முனிவர் வசித்து வந்தார். மிகவும் இரக்க சுபாவம் உடையவர். அந்தக் காட்டில் அவருக்கு துணையாக ஒரு நாய் இருந்தது.

அது எப்போதும் அவரையே சுற்றிச் சுற்றி வந்தது.

ஒரு நாள் அந்த நாய் அழுது கொண்டிருந்தது. முனிவர் அதைப் பார்த்தார். அவருக்கு இரக்கம் வந்துவிட்டது. அந்த நாயைக் கூப்பிட்டார். அது அருகில் வந்து நின்றது.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு இந்தக் காட்டில் வாழ்வதற்கு பயமாக இருக்கிறது" என்றது.

"நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றார்.

"நீங்கள் எப்பொழுதும் என்பக்கத்தில் இருப்பதில்லை. சில சமயம் நான் காட்டுக்குள் தனியாக போய் வந்து கொண்டிருப்பேன். இந்தக் காட்டுக்குள் நிறைய நரி இருக்கிறது. எந்த நேரமும் என் மீது பாய்ந்து கடிந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றது.

"கவலைப்படாதே! என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது அதை உபயோகப்படுத்தி உன்னையே நரியாக மாற்றி விடுகிறேன்" என்றார்.

அதேபோன்று ஒரு மந்திரத்தை சொல்ல நாய் நரியாக மாறியது.

இனிமேல் கவலைப்படாதே! இந்தக் காட்டிலிருக்கும் மற்ற நரிகள் கூட உன்னைப் பார்த்தால் பயப்படும்" என்றார்.

சிறிது நாட்களின் பின் மறுபடியும் ஒருநாள் நரி உருவத்திலிருந்த நாய் அழுதது.

மறுபடியும் ஏன் அழுகிறாய்? என்று கேட்டார் முனிவர்.

"இந்தக் காட்டில் நிறைய சிறுத்தைகள் இருக்கின்றன. அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந்த நேரத்தில் என்ன ஆகுமோ?" என்றது.

"சரி, உன்னை ஒரு சிறுத்தையாக மாற்றி விடுகிறேன்" என்றார் முனிவர்.

அதேபோன்று செய்துவிட்டார்.

சிறிது நாட்களின் பின் சிறுத்தை உருவத்திலிருந்த நாய் அழ ஆரம்பித்தது.

"என்ன காரணம்?" என்று விசாரித்தார்.

"இந்தக் காட்டில் சிங்கங்கள் நிறைய இருக்கிறது. ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ? என்று பயமாக இருக்கிறது" என்றது.

"சரி, உன்னை ஒரு சிங்கமாக மாற்றி விடுகிறேன்" என்றார். மாற்றி விட்டார்.

"நீ இப்போது இந்தக் காட்டுக்கே ராஜா" என்றார். சிங்கமாக இருந்த நாய் யோசித்தது. உடனே அந்த முனிவர் மீது பாய்ந்து கடிப்பதற்குப் போனது.

"என்ன இது என்னையே கடிக்க வருகிறாய்?" என்றார்.

"நீ என்னை விட பெரிய சிங்கமாக யாரையாவது மாற்றிவிட்டால் என்ன செய்வது? உன்னை உயிரோடு விட்டு வைப்பது ஆபத்து" என்று சொல்லிக் கொண்டே வந்தது.

"ஆகா! இரக்கம் காட்டி ஏமாந்து விட்டோமே!" என்பது அப்பொழுதுதான் முனிவருக்கு புரிய ஆரம்பித்தது. உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். உடனே ஒரு மந்திரத்தைச் சொல்லி அந்தச் சிங்கத்தை பழையபடி நாயாக மாற்றினார்.

அதுவும் வேறு வழியில்லாமல் அவருடைய காலையே மறுபடியும் சுற்றி வந்தது.

இரக்கம் காட்டலாம். ஆனால் ஏமாந்து போய்விடக் கூடாது என்பது தான் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விடயம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கல்வியமைச்சரின் அனுமதி கிடைத்ததும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

## வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வடக்கில் முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக எவ்வித கொடுப்பனவுமின்றிச் சேவையாற்றி வரும் தமக்கு நிரந்தர நியமனங்களை வழங்க அதிகாரிகள் முன்வரவில்லையென முல்லைத்தீவு மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளமை கவலையளிப்பதாகவும் தாம் பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த வருட இறுதிக்குள் தமது சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆசிரிய சேவையிலிருந்து விலகப் போவதாக துணுக்காய் வலயத் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

தமது சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் செல்வராசா முகுந்தன் தெரிவித்துள்ளதுடன் இதுபற்றி வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரிடம் கேட்ட போது,

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஊடாக குறித்த ஒரு தொகுதி தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் கல்வியமைச்சிடம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சரின் அனுமதி கிடைத்ததும் இவர்களுக்கான நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பாலியல் கல்வி நூல் பற்றி விசாரணை

## கல்வியமைச்சினால் குழு நியமனம்

பாலியல் கல்வி தொடர்பாகச் சர்வதேசப் பாடசாலை ஒன்றில் விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் புத்தகம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்குக் கல்வி அமைச்சு குழு வொன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவினர் குறித்த புத்தகம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப் பார்கள் எனக் கல்வியமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன குறிப்பிட்டார்.

இருப்பினும் சர்வதேசப்பாடசாலைகளை உத்தியோக பூர்வமாக நிர்வகிப்பதற்கான அதிகாரம் கல்வி அமைச்சுக்கு இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேசப் பாடசாலையொன்றில் கல்வி கற்கும் சிறுவர்களுக்குப் பாலியல் கல்வி பற்றிய புத்தகமொன்று விநியோகிக்கப் பட்டதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இந்த முறைப் பாடுபற்றி அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# டிப்ளோமா (பகுதிநேர) கற்கைநெறிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் கோரப்பட்ட மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் நுண்நிதியியல் ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15 ஆம்திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தர வகுப்பில் சித்தியடைந்த பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களின் நலன் கருதி அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் இம் மூன்று டிப்ளோமா கற்கைநெறிகளும் வார இறுதிநாட்களில் நடத்தப்படவுள்ளது. தொழில்புரியும் எவரும் இக்கற்கைநெறியைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர் என யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*02.11.2010*
*(ஐப்பசி 16, செவ்வாய்க்கிழமை)*
*ஏகாதசி முன்னிரவு 7.38 மணிவரை*
*பூரம் பிற்பகல் 5.49 மணிவரை*
*இராகுகாலம் 3.04-4.34 மணிவரை*
*சுபநேரம் 10.34-12.04 மணிவரை*
*ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்.*

**மேடம்** தொட்ட காரியம் வெற்றிபெறும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க விரும்புவீர்கள், எதிர்பார்த்த தொகை வந்து சேரலாம், திருமணப் பேச்சுக்கள் கைகூடலாம்.

**இடபம்** தனவரவில் இருந்த தடைகள் அகலும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், பிரயாண நன்மையுண்டு, சந்தோசம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்பு வரலாம்.

**சிங்கம்** அம்மன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தகராறுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், உத்தியோக நலன்கருதி ஊர்மாற்றம் செல்லும் எண்ணம் மேலோங்கும், சுப நிகழ்வுக்காக எடுத்த தொகையைச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் அதிகரிக்கும் நாள், திடீர் பணவரவால் மகிழ்ச்சி அடைவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் கூடும்.

**விருச்சிகம்** இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர் உங்கள் இல்லம் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

**தனுசு** புத்தி சாதுரியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், தடைப்பட்ட ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும், தொழில் ரீதியாக முக்கியமானவர்களை சந்திப்பீர்கள்.

**மகரம்** எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, உடல் நலம் சீராக ஒரு சிறு செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், புதிய திருப்பத்திற்குரிய நாள்.

**கும்பம்** விட்டுச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவு நனவாகலாம், விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், அலுவலகப் பணி துரிதமாகும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், மாற்று மருத்துவத்தால் ஆரோக்கியம் சீராகும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 80 |
| தக்காளி | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 80 | 60 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 |
| வாழைக்காய் | 35 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 |
| பாகற்காய் | 140 | 140 | 130 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 90 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | -- | 130 |
| போஞ்சி | 100 | 140 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |



யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற உலக சிறுவர் தினவிழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## இலவசத் தேவார பண்ணிசைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத் தினதும் வட இலங்கை சங்கீத சபையினதும் பாட விதானத்திற்கமைய தேவாரப் பண்ணிசை வகுப்பை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் மாலை 3 மணி தொடக்கம் 4.30 மணி வரை யாழ்.இந்துக் கல்லூரியில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடாத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இரு பாலாரும் பங்குபற்றி பயன்பெறலாம் எனவும் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவர் என்றும் மன்ற அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான இம் மாதத்திற்குரிய மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கந்தசஷ்டி விழா

(கல்வயல்)

சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான கந்தசஷ்டி விழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 7 நாட்கள் விசேடபூசை நடைபெறும்.

தினமும் பிற்பகல் 3மணிக்கு முருகப் பெருமானுக்கு விஷேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்று வசந்த மண்டபப் பூசையும் உள்வீதியுலாவும் இடம்பெறும்.

ஆறாம் நாளன்று சூர சம்காரமும் ஏழாம் நாள் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (ஸ்ரீ-31)

## தொழிற்சந்தை மூலம் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டதில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை தொழிற்சந்தை ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தொழிற் சந்தையில் கொழும்பில் இருந்து வருகை தரும் தனியார் தொழில் நிறுவனங்களும் உள்ளூர் தொழில் நிறுவனங்களும் கலந்துகொண்டு தமது பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அன்றைய தினம் நேர்முகத் தேர்வினை நடத்தி இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளனர்.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப விரும்புகின்ற நிறுவனங்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னதாக மாவட்ட செயலக திட்டமிடல் கிளையுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மழையையடுத்து நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையை அடுத்து நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனையடுத்து ஒவ்வொருவரும் தமது வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்குமாறு சுகாதார திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.(ஸ்ரீ-10)





## கும்பாபிஷேக மலர் வெளியீடு

(சாவகச்சேரி)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர் வெளியீடு எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய முன்றலில் மத்தியஸ்த சபை யாழ். மாவட்ட மேற்பார்வையாளரும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளருமான பிரம்மஸ்ரீ பரமானந்த சனாதனசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ.சி. சிதம்பரநாதக்குருக்கள் மற்றும் அகில இலங்கை சைவ அர்ச்சக குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ. க.கிருபானந்தகுருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் செல்வி ந.றஞ்சனா நிகழ்த்தவுள்ளார். முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமியிடம் இருந்து கனடாவைச் சேர்ந்த சி.சுந்தரலிங்கம் பெற்றுக்கொள்வார். (ஸ்ரீ-29)

## டிஜிற்றல் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தினால் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட டிஜிற்றல் ஆட்பயிற்சி நெறிக்கு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு MCS IT CAMPUS இல. 324 பலாலிவீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தங்கள் வரவினை உறுதிப்படுத்துவதற்கு 021 222 7862 என்ற தொலைபேசி இலக்கத்துடன் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்அழைப்பிழனை ஏற்படுத்தி உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலக மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஏ. ராஜரட்ணம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூல்களின் கண்காட்சி

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய நூல்களின் கண்காட்சி இன்று பிரதேச சபையின் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் புராதன கால பொருட்கள் காட்சிப்படுத்தப்படுவதோடு கட்டுரைப் போட்டி மற்றும் சுவரொட்டிகளில் பரிசு பெற்ற ஆக்கங்கள் இந்தக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

அத்துடன் இவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-35)

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் நடாத்தும் இம்மாத ஆய்வரங்கு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் தலைமையில் நடைபெறும்.

இவ்வாய்வரங்கில் வவுனியா வளாக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

இதில் ஆங்கில மொழிக் கற்பித்தல் முறையியல்கள் மீதான ஒரு பார்வை எனும் தலைப்பில் ஆய்வரங்கும் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் ஆங்கிலத் துறை சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் துறை தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தென்மராட்சியில் தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

(சாவகச்சேரி)

மந்துவில் மேற்கு விவசாய சம்மேளன செயலாளர் ப.ஸ்ரீகாந்தன் மற்றும் மந்துவில் வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி. சுப்பிரணியம் ஆகியோர் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 7 விவசாய சம்மேளனங்களினால் தெரிவு செய்யப்பட்ட 35 இளைஞர்யுவதிகளுக்கு தென்னைப் பயிர்ச் செய்கை பற்றிய பூரண அறிவுக்கான செயலமர்வு மந்துவில் வடக்கு விவசாய சம்மேளன எல்லைக்கு உட்பட்ட தனியார் காணிகளில் நடாத்தப்படுகிறது.

தெங்கு அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் நடாத்தப்படும் மேற்படி நிகழ்வில் கொழும்பில் இருந்து வருகை தரும் போதனாசிரியர்கள் மற்றும் அதிகாரிகளின் வழிநடத்தலில் நாளையும் நாளை மறுதினமும் மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இறுதிநாளான நாளை மறுதினம் 35 பயற்சியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

சான்றிதழைப் பெற்ற 35 பயிற்சியாளர்களும் தென்மராட்சிப் பிரதேசத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கும் தெங்கு செய்கையாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுவர். (ஸ்ரீ-29)

## பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியில் 13 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமான ஹொக்கி சுற்றுப்போட்டி ஒன்றி னை எதிர்வரும் 14 ,15 ஆம் திகதிகளில் கண்டியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சுற்றுப்போட்டிக்கு பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னர் தமது பதிவினை யாழ்.மாவட்டப் படசாலை ஹொக்கிச் சங்கத் தலைவரும் வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி அதிபருமான என்.நோயல் விமலேந்திரன் மற்றும் யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கச்செயலாளரும் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி விளையாட்டு பொறுப்பாசிரியருமான ப.தர்மகுமார் ஆகியோரிடம் மேற்கொள்ளுமாறு இச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிக்கு பாடசாலைகள் பதிவுகளை மேற்கொள்ளாது விட்டால் யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் விரும்பிய அணிகளை வெல்வதற்கு அனுமதி வழங்குமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தினால் அடுத்த ஆண்டுக்கான பாடசாலை மதிய உணவு விநியோகம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட உலருணவு செயற்றிட்ட உத்தியோகத்தர் க.ஜெயரூபன் செயலமர்வை நடத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# நீண்டகாலமாக தேங்கியிருக்கும் வழக்குகளை விசாரிப்பதற்காக தற்காலிக நீதிமன்றங்கள்

## நீதியமைச்சு நடவடிக்கை

நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் தேங்கியிருக்கும் வழக்குகளை விசாரணை செய்வதற்காக தற்காலிக நீதிமன்றங்கள் நிறுவப்படவுள்ளன.

நீண்ட காலமாக வழக்குகள் விசாரிக்கப்படாது வழக்குகள் தேங்கியிருக்கும் நீதிமன்றங்கள் உள்ள பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு இப்பிரதேசங்களில் தற்காலிக மாவட்ட மற்றும் மஜிஸ்திரேட் நீதி மன்றங்களை நிறு வநீதி அமைச்சு உத்தேசித்துள்ளது.

இதன் பிரகா ரம் ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் சிரேஷ்ட சட்டத்தர ணிகளைக் கொண்டு இத்தற்காலிக நீதிமன்றங்களில் விசாரணைக் குட்படுத்தப்படாது அந்தப் பிரதேச நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் வழக்குகள் மீதான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வுத்தேச தற்காலிக நீதிமன்றங்கள் இரண்டு வருடங்கள் இயங்குமெனவும் இது குறித்து உரிய உயர் தரப்புக்க ளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஒரு சில பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் ஏறக்குறைய 30 முதல் 40 வருடங்களாக ஒரு சில வழக்குகள் விசாரிக்கப்படாது தேங்கியிருப்பதாகவும் இதுவரை 4 இலட்சம் வழக்குகள் விசாரிக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யானைத் தந்தங்களை வைத்திருந்த 4 பேர் கைது

பத்து இலட்சம் ரூபா பெறுமதியான யானைத் தந்தங்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

வத்துலிய, கொபேகன ஆகிய பிரதேசங்களில் மேற்படி யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் மேற்படி யானைத் தந்தங்களை அப்பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு விற்க முயற்சிப்பதாக கிடைத்த தகவலையடுத்து அவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஸ்ரீ-2)

# வாக்காளர் இடாப்பு திருத்தத்திற்கான கால அவகாசம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

வடமாகாண வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகளுக்கான படிவங்கைள ஒப்படைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தின் சில பகுதிகளில் தொடர்ந்தும் மீள் குடியேற்றப் பணிகள் இடம்பெற்று வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் மீள்குடியேறும் மக்கள் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை வாக்காளர் இடாப்புப் பணிக்களுக்கான படிவங்களை ஒப்படைக்க முடியுமெனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இக்கால அவகாசம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் ஏற்கனவே மீள்குடியேறியுள்ளோர் படிவங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் கையளிக்க வேண்டுமெனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களில் வாக்காளர் இடாப்புத் திருத்தத்திற்கான படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதெனவும் அறிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலைகளில் கோதுமைமாவினாலான உணவுகளுக்கு தடை

(கொழும்பு)

வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் கோதுமை மாவினால் தயார் செய்யப்பட்ட பாண், பணிஸ், கேக் மற்றும் கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட ஏனைய உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை உடனடியாக அமுல்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை மக்கள் உண்ணுவதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் வகையிலேயே, சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன இந்தத் தீர்மானத்திற்கு வந்ததாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வடபகுதி விவசாயிகளுக்கென இந்தியா 52 உழவியந்திரங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

வடபகுதி விவசாயிகளுக்கென 52 உழவு இயந்திரங்களை இந்திய அரசாங்கம் அன்பளிப்பாக வழங்குகிறது. இவற்றின் பெறுமதி சுமார் ஆறரை கோடி ரூபாவாகும்.

வடமாகாணத்துக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷவிடம் 52 உழவு இயந்திரங்களையும் இலங்கையி லுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்த் உத்தியோக பூர்வமாக கையளித்தார்.

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று மாலை 4 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த உழவு இயந்திரங்களை இலங்கை அரசின் சார்பில் பொறுப்பேற்கும் அமைச்சர் பசில்ராஜ பக்ஷ வடமாகாண ஆளுநரிடம் கையளிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# செயற்கையான முறையில் கல்லீரல் வளர்க்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்

(கொழும்பு)

கல்லீரல் மனித உடலில் மிக முக்கிய பங்கு வகுக்கிறது. கல்லீரல் கெட்டு போனால் அது உயிருக்கு ஆபத்தாக முடியும். எனவே செயற்கையான முறையில் கல்லீரல் வளர்க்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இம்முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். அவர்கள் விலங்குகளின் கல்லீரல்களில் மனித செல்களை விதை போன்று விதைத்தனர்.

பின்னர் அதில் நன்கு வளர்ந்த செல்களை வளர்ச்சி அடையாத மனித கல்லீரல் செல்களுடன் இணைத்தனர். அவற்றை ஒட்சிசன் மற்றும் தேவையான சத்துகளுடன் சேர்த்து செயற்கை முறையில் ஆய்வு கூடத்தில் வளர்த்தனர்.

இதைத் தொடர்ந்து ஒரு வாரத்தில் அந்த கல்லீரல் நன்றாக வளர்ந்து மனித உடலில் உள்ள கல்லீரல் போன்று பணிகள் மேற்கொண்டது.

கல்லீரல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு செயற்கையாக தயாரிக்கப்பட்ட இந்த கல்லீரல் பயன்படும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அதற்கான பரிசோதனைகள் மற் றும் தேவையான மருந்துகள் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. (ஸ்ரீ)


வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கம்

## அறிவித்தல்

### புதிய கட்டண விபரம் வருமாறு

| | |
|---|---|
| முடியுடன் சேவ் (Hair Dressing & Shave) | 150.00 |
| முடிமட்டும் (Hair Dressing Only) | 90.00 |
| சேவ் மட்டும் (Shaving Only) | 60.00 |
| முடி வெட்டி தாடி ஒதுக்க (Hair Dressing & Shaping Beard) | 160.00 |
| தாடி ஒதுக்க (Shaping Beard) | 70.00 |
| சிறுவர்களுக்கு (Children) | 60.00 |
| குழந்தைகளுக்கு (Infants) | 70.00 |
| பெண்களுக்கு (Ladies) | 100.00 |
| பெண் பிள்ளைகளுக்கு (Girls Grown Up) | 70.00 |
| முடியுடன் சேவ் செய்து டைஅடிக்க (Hair Dressing Shaving & Hair Dying) | 300.00 |
| கீற்றர் பிடிக்க (Hair Drier) | 50.00 |
| மசாஜ் பிடிக்க (Massaging) | 50.00 |
| மொட்டை வழித்தல் (Shaving off Hair) | 200.00 |

கட்டணப் பட்டியலின் அடிப்படையில் கட்டணத்தை அறவிடும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

புதன் விடுமுறை தினமாகும்

விடுமுறைதினம்- தீபாவளி, நத்தார், மேதினம்

பழைய சந்தை மேல்மாடி, நெல்லியடி, கரவெட்டி.

புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது

கே.வேணுகுமார் தலைவர்

(2796)

# அடுத்த வருடம் ஐந்து சர்வதேச பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்

## உயர்கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவது தொடர்பாக 25 க்கும் மேற்பட்ட நாடுகள் ஆலோசித்து வருவதாக உயர்கல்வியமைச்சு குறிப்பிடுகிறது.

பிரித்தானியா, ரஷ்யா, பிரான்ஸ், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் இது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக உயர்கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறினார்.

அடுத்த வருடத்தில் 5 சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் ஸ்தாபிக்க முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பு மாவட்டத்தைத் தவிர்ந்த வேறு பிரதேசங்களில் உத்தேச சர்வதேச பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் செயலாளர் கூறினார்.

இதன்மூலம் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அதிகளவிலான வாய்ப்புகள் கிடைக்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஸ்ரீ-2)

# கொழும்பின் பல இடங்களில் நிலம் தாழிறங்கியுள்ளது

## கொழும்பு மாநகர விசேட ஆணையாளர் தகவல்

(கொழும்பு)

கொழும்பு மாநகரத்தில் சில பகுதிகள் தாழிறங்குவது தொடர்பாக அவுஸ்திரேலிய நிபுணர்கள் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஆய்வுகள் முடிவடைந்தவுடன் நிலம் தாழிறங்குவதைத் தடுப்பதற்கான நிரந்தரத் தீர்வொன்றை வழங்குவதங்குத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் ஓமார் காமில் தெரிவித்தார்.

இதுவரை உறுதி செய்யப்பட்ட முதற்கட்ட ஆய்வுகளுக்கு அமைய கொழும்பு மாநகரிலுள்ள பழைய கழிவு நீர்க குழாய் கட்டமைப்பே இந்தத் தாழிறக்கத்திற்கான முக்கிய காரணமாகத் தெரிகிறது.

இந்தக் கழிவு நீர்க்குழாய் கட்டமைப்பு 100 ஆண்டுகளை விடவும் பழைமை வாய்ந்தது என அவர் கூறினார்.

கொழும்பு மாநகரத்தின் பல இடங்களில் நிலம் தாழிறங்கியுள்ளதாக மாநகர விசேட ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலையில் காதலுக்குத் தடை விதிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் காதலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள அதே நேரம் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ள பொலிஸார் பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவிகளை சேட்டை செய்கின்றனர்.

மாணவ சமூகத்தை அகோர அரசிடமிருந்து யார் தான் காப்பாற்றுவார்கள் என்று மாணவர் ஒன்றியத்தின் பிரதி ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார கேள்வியெழுப்பினார்.

ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விஷேட சந்திப்பொன்றின் போதே சஞ்ஜீவ பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

இன்று ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் காதலிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை பல்கலைக்கழக நிர்வாகமே ஏற்படுத்தியுள்ளது. மீறி யாராவது காதலித்து மாட்டினீர்கள் என்றால் குறிப்பிட்ட மாணவிகளின் கன்னித் தன்மை பரிசோதிக்கப்படும்.

இதனால் மேற்படி பல்கலைக்கழகத்தில் மாணவ மாணவிகள் கல்வி நடவடிக்கைகளுக்கு கூட ஒன்றிணைந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதே போன்று பேராதனை பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு இடையில் ஏற்படும் மோதல்களை தடுப்பதற்காக எனக் கூறி அரசாங்கம் சுமார் 400 பொலிஸார்களை பல்கலைக்கழக வளாகத்தில் காவலுக்கு நிறுத்தியுள்ளது.

இவர்கள் அங்கு வரும் மாணவிகளுக்கு சேட்டை செய்து அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றனர். இது தொடர்பாக முறைப்பாடு செய்யவோ கேட்பதற்கோ யாருமே இல்லாத நிலையே உருவாகியுள்ளது எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# வெள்ளைக்கொடி விவகார வழக்கு விசாரணை இன்று மீண்டும் ஆரம்பம்

மின்சாரம் தடைப்பட்டதன் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட வெள்ளைக்கொடி விவகார வழக்கின் விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் இன்று செவ்வாய்க் கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெற்று வருகின்ற வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கில், சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பிரட்ரிகா ஜான்ஸ் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாகவும் சாட்சியமளித்தார்.

வடக்கில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கு வருகை தந்த விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகையில் வெளி யான செய்தி தொடர்பில் தாக்கல் செய்யப் பட்ட வழக்கின் விசாரணையே நடைபெற்று வருகின்றது.

மேல்நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜய சுந்தர தலைமையிலான எச்.என்.பி.பி. வராவெவ, சர்பிக் ரஷீன் ஆகிய நீதிபதிகள் குழு முன்னிலையில் நடைபெறும். இந்த வழக்கின் ஐந்தாவது நாள் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நீதி மன்றத்தில் மின்சாரம் தடைப்பட்டது.

இந்நிலையில் வழக்கு விசாரணையை பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்குமாறு பிரதிவாதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிபதிகளிடம் கேட்டுக்கொண்டார். அதனடிப் படை யில் மேற்படி வழக்கு விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைப் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

உலகின் மிகப் பாதுகாப்பான நாடுகளில் ஒன்றாக இலங்கை உருவாகியுள்ளதென ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைப் பிரதிநிதி ரிவன் த ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான முறையில் தமது விடுமுறையைக் கழிப்பதற்கு உசிதமான இடமாக இலங்கை உருவாகியுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரசல்ஸிற்கும் கொழும்பிற்கும் இடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளியின் சர்வதேச சிறுவர் தினம் அண்மையில் நிலைய மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நிலையத் தலைவர் ச.ஏகாம்பரநாதன் சொற்பொழிவாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உரும்பிராய் மக்கள் வங்கியின் முகாமையாளர் பொ.தங்கராசா, நிலையப் பொருளாளர் வீ.புஸ்பநாதன் ஆகியோர் மேடையில் இருப்பதைப் படத்தில் காணலாம்.




# முகம் மாற்றி வருகிறது இலங்கைக்கு நோர்வே குழு

## புலிகளுக்கு பொறிவைக்க நோர்வேயுடன் நெருங்கும் அரசு

மீண்டும் நோர்வே பற்றிய செய்திகள் ஊடகங்களில் அடிபடத் தொடங்கியுள்ளன. கடந்த செப்டெம்பர் மாத நடுப்பகுதியில், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்ற நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வே பிரதமர் ஜீன்ஸ் ஸ்ரோல்ரென்பேர்க் மற்றும் அந்த நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார். இதன் பின்னரே நோர்வே பற்றிய செய்திகள் இலங்கை ஊடகங்களில் இடம் பிடிக்கத் தொடங்கின.

இலங்கையுடனான உறவுகளைப் புதுப்பிக்கும் நோக்கில் எரிக் சொல்ஹெய்மை கொழும்புக்கு வருமாறும் இந்தச் சந்திப்பின்போது அழைப்பு விடுத்திருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. இதையடுத்து அடுத்த வருடம் ஜனவரி மாதம் கொழும்பு வருவதற்கு எரிக் சொல்ஹெய்ம் இணங்கியுள்ளார்.

இது இப்படியிருக்க, இன்னொரு பக்கத்தில் இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வி கண்டது ஏன் என்பது குறித்து தனியார் முகவர் அமைப்பு ஒன்றின் மூலம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது நோர்வே.

இந்தநிலையில், நல்லிணக்க ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்துள்ள கோமின் தயாசிறி போன்றவர்கள், நோர்வேயே சமாதான முயற்சிகள் முறிந்து போனதற்குப் பிரதான பொறுப்பாளி என்று குற்றஞ்சாட்டி வருகின்றனர்.



சிலநாட்களுக்கு முன்னர் சட்டத்தரணி கோமின் தயாசிறி, அளித்த சாட்சியத்தில் எரிக் சொல்ஹெய்ம் பக்கச் சார்பாக நடந்து கொண்டதாகவும்- அவரை, இலங்கைக்கு வேண்டப்படாதவராக அறிவிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்த சிலரும் அவ்வாறே கூறியிருந்தனர். 1990களின் இறுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையிலான போர் தீவிரமடைந்திருந்த கட்டத்தில் தான், நோர்வே சமாதான முயற்சிகளில் கால் வைத்தது. அப்போது நோர்வேயின் சமாதான முயற்சிகள் உடனடி வெற்றி காணவில்லை.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சமாதானப் பேச்சுகளுக்கோ அல்லது போர் நிறுத்தத்துக்கோ தயாராக இருக்கவில்லை.

ஆனால், அதற்குப் பின்னர் வந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதானப் பேச்சு, போர்நிறுத்தம் என்று இறங்க, நோர்வேயின் முயற்சிகள் பலன் கொடுக்கத் தொடங்கின.

போரில் அரசபடைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளும், பொருளாதார நெருக்குவாரங்களுமே அத்தகைய முடிவுக்கு அரசாங்கத்தை இட்டுச் சென்றன. இதை நல்லிணக்க ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்த பல மூத்த இராஜதந்திரிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆரம்பத்தில், போர்நிறுத்தத்தை உருவாக்கினால் போதும், பேச்சுக்களை தொடங்கி தீர்வு காணலாம் என்றே நோர்வே நினைத்திருந்தது.

ஆனால் போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் தான் அதை நடைமுறைப்படுத்துவது, அதனால் ஏற்படும் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்பன எந்தளவுக்குச் சிக்கலானது என்று நோர்வேக்குப் புரிந்தது.

சுமார் நான்கு வருடகாலப் போர் நிறுத்தம் 2006 இல் முறிந்து போக அரசாங்கம் போரைத் தீவிரப்படுத்தி புலிகளையே இல்லாமல் செய்து விட்டது.

போர்நிறுத்த காலத்தில் இடம்பெற்ற, அதற்குச் சவாலாக பல சம்பவங்களும், சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளுமே நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் குழம்பிப் போகக் காரணமாக இருந்தன.

சமாதான முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளராக மட்டுமே இருந்தது. அதற்கு மத்தியஸ்தர் என்ற அங்கீகாரம் கூடக் கிடைக்கவில்லை.

இந்த சமாதான முயற்சிகளில் முக்கிய பங்காளாரான புலிகளும் அரசதரப்பும் அதற்கேற்றவாறு நடந்து கொண்டனவா என்பது முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம். போர்நிறுத்த உடன்பாட்டை முறித்து சமாதானப் பேச்சுக்களை குழப்புவதற்கென்று பல சக்திகள் கங்கணம் கட்டிநின்றன.

அதற்காக எத்தனையோ போராட்டங்கள் நடத்தப்பட்டன; ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தைப் போல வேறெங்கும் உள்ள தூதரகங்கள் இத்தனை எதிர்ப்புப் போராட்டங்களைச் சந்தித்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

அந்தளவுக்கு சமாதான முயற்சிகளுக்குக் குறுக்கே பல தடைக்கற்கள் போடப்பட்டன. இதன் விளைவாக சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒருவரை ஒருவர் நம்பிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

அவையெல்லாம் ஒன்று சேர்ந்ததன் விளைவே போர்நிறுத்தம் முறிந்தது; சமாதான முயற்சிகள் சீர்குலைந்தன.

இதில் தனியே புலிகளோ அல்லது அரசதரப்போ அல்லது நோர்வேயோ காரணமல்ல. எந்தவொரு தரப்பினை யாவது தனியே கூண்டிலேற்றுவது முறையற்றது.

நோர்வேயின் தனியார் முகவர் அமைப்பு ஆரம்பிக்கவுள்ள விசாரணைகளில் இதற்கான காரணங்கள் ஓரளவுக்கேனும் தெரியவரும் என்பது வெளிப்படை.

ஏனென்றால், இந்த விடயத்தில் நோர்வே திறந்த மனதுடன் தமது பக்க நியாயங்களைச் சொல்லும் என எதிர்பார்க்கலாம்.

அதேபோல இலங்கை அரசாங்கமும் அந்த நியாயங்களை முன்வைக்கத் தயாராகவே இருக்கும் போலத் தெரிகிறது.

ஏனென்றால் ஐ.நா பொதுச்செயலர் நியமித்த நிபுணர்குழுவை நிராகரித்தது போல இதை அரசாங்கம் நிராகரிக்கவில்லை. எனவே இந்த விசாரணையை இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளும்.

அதேபோல நோர்வேயின் விசாரணையின் போது புலிகள் தரப்பில் புலம் பெயர் சமூகத்தினரும் சாட்சியங்களை முன்வைக்கும் சாத்தியங்கள் உள்ளன.

எனவே இந்த விடயத்தில் ஓரளவுக்கேனும் நியாயமான அறிக்கை ஒன்றை எதிர்பார்க்கலாம். இந்தநிலையில், இலங்கை அரசாங்கம் எரிக் சொல்ஹெய்மை கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்க கோமின் தயாசிறி அவரை வேண்டப்படாதவராக அறிவிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

சட்டத்தரணி கோமின் தயாசிறி 2006ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களில் இலங்கை அரசின் சார்பில் கலந்துகொண்ட குழுவில் ஆலோசகராக இருந்தவர். அவர் அப்படிக் கூறியிருந்தாலும் இலங்கை அரசாங்கம் இப்போது நோர்வேயுடன் பகைமை பாராட்டும் நிலையில் இல்லை. நடந்து முடிந்ததை மறந்துவிட்டு நடக்கப்போவதைப் பார்க்கலாம் என்ற ரீதியில் நெருங்கிச் செலவிட்ட நிதி சுமார் 100 மில்லியன் குரோனர்.

அதைவிட அதிகமாக இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக நோர்வே அள்ளிக் கொடுத்திருக்கிறது. குளங்களின் அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தித் திட்டங்களில் நோர்வே அதிகமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

அதைவிட சமூக அபிவிருத்தித் திட்டங்களிலும் நோர்வேயின் பங்களிப்பு அதிகமானது. சமாதான முயற்சிகளின் தோல்விக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலையில் ஒரு இடைவெளி ஏற்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து நோர்வேயை நீக்குவதாக இலங்கை அரசே அறிவித்தது. ஆனால் இப்போது இலங்கைக்கு நோர்வேயிடம் இருந்து பல



காரியங்கள் ஆக வேண்டியுள்ளன.

தொழில்துறை முதலீடுகளைப் பெறுவதற்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நோர்வேயின் உதவியைப் பெறவும் அரசாங்கம் விரும்புகிறது. போரின் முடிவுக்குப் பிந்திய மீள் கட்டுமானத்தில் நோர்வேயை பங்கேற்க வைப்பது அரசாங்கத்தின் திட்டம். அதற்காகவே இந்த நெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் எந்தத் தடைவேலியும் கிடையாது என்று கூறியுள்ளார்.

இது நோர்வேயை புதிய முகத்துடன் இலங்கையில் அறிமுகம் செய்து கொள்ள வைக்கும் முயற்சியாகவே தெரிகிறது.

எரிக் சொல்ஹெய்ம் போன்ற முன்னர் பழகிய முகங்கள் இப்போது வேறொரு முகத்துடன் இலங்கைக்கு வரப்போகின்றனர்.

முன்னர் அவர்களின் தேவையும் வருகையும் சமாதானத் தேடலுக்குரியதாக இருந்தன. ஆனால், இப்போது அவர்களின் வருகையும் தேடலும் பொருளாதார நலன்களைக் மையப்படுத்தியதாக இருக்கப் போகின்றன.

இது தனியே இலங்கைக்கு மட்டுமான பொருளாதார நன்மைகளைக் கருத்தில்கொண்டதாக இருக்காது. மாறாக, நோர்வேயின் நன்மைகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கப் போகிறது. இதன் பின்னால் இன்னொரு விவகாரமும் இருக்கிறது.

**கே.சஞ்சயன்**

நோர்வேயில் தான் நெடியவன் போன்ற புலிகளின் சில முக்கிய தலைவர்கள் இருக்கின்றனர். இவர்களால் பெரிதாக எதையும் செய்ய முடியாது என்ற போதும் புலிகளின் எச்சத்தை இல்லாமல் செய்து விடுவதற்கு இவர்களும் இலங்கை அரசுக்குத் தேவை. அதற்கு நோர்வேயுடன் நெருங்கிப் போவது தான் இலங்கை அரசுக்கு உள்ள வழி.

நன்றி:- தமிழ்மிரர்

# 17 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

1 மற்றும் 7-ஆம் எண்களின் கூட்டு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் மனத்தடுமாற்றம் அதிகம் உடையவர்களாக இருப்பார்கள். ஆரம்ப காலத்தில் சுமாரான பொருளாதார நிலையும்; 44 வயதுக்குமேல் உயர்வான பொருளாதார நிலையும் அடையக் கூடியவர்கள். இவர்கள் பெரும்பாலும் பேராசை கொண்டவர்களாகவும் ஒரு சிலர் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவர்களாகவும் இருப்பதைக் காணலாம். பசை உள்ள பக்கம் சாயும் குணம் அதிகம் இருக்கும் இவர்களுக்கு, வாழ்க்கையில் திருப்தி என்ற நினைப்பே இல்லாமல் வாழும் நிலையும் இருக்கும். இவர்களின் தொழில் எண்கள் 8, 9; தொழில் உதவி எண்கள் 2, 6.

17 ஆம் திகதியில் பிறந்த அரசு ஊழியர்கள் பெரும்பாலும் வெளியில் புலியாகவும் வீட்டில் எலியாகவும் இருப்பார்கள். இவர்களின் மனதில் ஏதேனும் ஒன்றைப் பற்றிய பய உணர்வு அல்லது புரியாத சிந்தனை இருப்பதே இதற்குக் காரணம். இவர்களுக்கு 1, 7 ஆம் எண்களின் ஆதிக்கத்துடன் தொழில் எண்களான 8, 9 ஆம் எண்களின் ஆதிக்கமும் மாறி மாறிச் செயல்படுவதால் இப்படி இருக்கிறது. 7, 9 ஆம் எண்களின் ஆதிக்கம் நன்றாக இருந்தால் மிக உயர்ந்த பதவி மற்றும் பொருளாதார நிலையை அடையக்கூடியவர்களாக இருப்பார்கள். தொழில் உதவி எண் 6 இன் ஆதிக்கம் அதிகமாகும்போது இறக்கமில்லாத ஏற்றமான வாழ்வைப் பெறும் நிலை உண்டாகும். மிகவும் சிறிய பதவியில் இருந்து மிக உயர்ந்த பதவிக்குச் செல்லும் நிலை உண்டாகும்.

எண்களின் ஆதிக்கக் குறை உள்ளவர்களுக்கு அடிக்கடி இடம் மாறுதல், மேலதிகாரியுடன் பிரச்சினை அல்லது உடல்நலக் குறைவு என்று ஏற்படும். இவர்கள் சனிக்கிழமைதோறும் பிரம்மாவுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் நன்மைகள் உண்டாகும்.

17 ஆம் திகதியில் பிறந்து சுயதொழில் செய்வோர் தொழில் அதிபதிகளாக இருப்பதைக் காணலாம். சாதாரண நிலையில் இருந்தும் பரம்பரையாகவும் முன்னேறி தொழில் அதிபராக் விளங்குவார்கள். ஒருசிலர் ஏற்றமும் இறக்கமும் மாறி மாறி அமையப் பெறுவார்கள்.

இருந்தாலும் மிகவும் மோசமான நிலை என்பது இவர்களின் மனதையும் செயற்பாடுகளையும் பொறுத்தே அமையும். இந்த திகதியில் பிறந்து சுயதொழில் செய்வோருக்குத் தொழில் எண்களான 8, 9 தொழில் உதவி எண்களில் 6 ஆம் எண்ணின் சுழற்சி முறை ஆதிக்கத்தில் தான் மிக உன்னதமான- உயர்வான நிலையைப் பெறுகிறார்கள். இவர்களுக்கு 2 ஆம் எண்ணின் ஆதிக்கம் கிடைக்கும்போதுதான் மனம்போன போக்கில் சென்று சரிவைக் காண்கிறார்கள். "பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்பதைப் போல 2 ஆம் எண்ணின் ஆதிக்கம் சரிவைத் தரும் நேரம், 1 ஆம் எண்ணின் ஆதிக்கமும் சேர்ந்து மிகவும் தாழ்வான நிலைக்குக் கொண்டு சென்றுவிடும். சரியாக சிந்தித்துச் செயற்பட்டால் சரிவை சரிக்கட்டி விடுவார்கள். இவர்கள் சனிக்கிழமைதோறும் மகாலட்சுமிக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் நன்மைகள் பல கிடைக்கப் பெறலாம்.

17 ஆம் திகதியில் பிறந்து தொழிலாளர்களாக இருப்போர் பெரும்பாலும் ஒரே மாதிரியான நிலையில் இருப்பதைக் காணலாம். தொழில் எண்ணின் ஆதிக்கம் மட்டுமே அமைந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

இவர்களின் தொழில் எண்ணின் செயற்பாடுகள் இரகசியமாகச் செயல்படுவதால் தான் (எப்பொழுது செயற்படும்-எப்பொழுது செயற்படாது என்பதை அறிந்துகொள்ள இயலாத நிலை) ஏற்றம் எப்போது வரும் என்பதை சரியாகத் திட்டமிடவோ எதிர்பார்க்கவோ முடிவதில்லை. இவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வயதைத் தாண்டித்தான் ஓரளவு முன்னேறும் நிலையைப் பெற்றுள்ளனர். இவர்களுக்குத் தொழில் எண்களுடன் தொழில் நட்பு எண்களில் 6 ஆம் எண்ணின் ஆதிக்கம் செயல்படத் தொடங்கியதும், சிறிது சிறிதாக முன்னேறி வாழ்வில் வெற்றியடையும் நிலை உருவாகும்.

முன்னேறும் காலங்களில் மனதைக் கட்டுப்படுத்தாவிட்டால் அதுவே மீண்டும் வீழ்ச்சிக்குக் காரணமாகிவிடும்.

பிறரை மதிக்காத குணமும் தரக்குறைவான சொல், செயல்களும் இவர்களிடம் ஒட்டிக் கொள்ளும். இவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் முதியோர்களுக்கு உதவிகள் செய்தால் நன்மைகள் பல பெறலாம்.

17 ஆம் திகதியில் பிறந்த கலைத்துறையினரை அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். எதையும் மனதில் நினைத்தால் தான் இவர்களுக்கு செயலில் வரும். கற்பனையோ, கதையோ இவர்கள் சொல்வது தான் சரி என்று சொல்ல ஒரு கூட்டம் இருக்கும். தெய்வ நம்பிக்கை அதிகமாக இருக்கும். இவர்களுக்கு தடுமாற்றம் என்பதும் தாழ்வு என்பதும் 2 ஆம் எண்ணால்தான். இந்த திகதியில் பிறந்த பலர் பெண்களால் சரிவைக் கண்டவர்கள். காரணகாரியம் தெரியாமல் தொழில் சரிவைக் கண்டவர்களும் இவர்களே. கலைத்துறையின் நுணுக்கங்களை மிகவும் தெளிவாகவும் சரியாகவும் பயன்படுத்திய பொருளாதார நிலையில் மிக அபரிமிதமான உயர்வை தொழில் உதவி எண் 6 இன் ஆதிக்கத்தால் பெறுவார்கள். இவர்கள் சனிக்கிழமை தோறும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிகள் செய்து வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

பிறந்த திகதி 17, விதி எண் 1 ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிகபட்சமாக 17 முதல் 26 வருடங்கள் வரை யோக பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 17, விதி எண் 2 ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் எண் ஆதிக்கத்தைப் பொறுத்து 17 ஆண்டுகளும்; 8 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் 17 ஆண்டுகளும் யோக பலனைக் கொடுக்கும். பிறந்த திகதி 17, விதி எண் 3 ஆக உள்ளவர்களுக்கு 26 ஆண்டுகள் யோக பலனைக் கொடுக்கும்.

பிறந்த திகதி 17, விதி எண் 4 ஆக உள்ளவர்களுக்கு மிக அதிகபட்சமாக 35 ஆண்டுகள் யோகபலன் கிடைக்கும். பிறந்த திகதி 17, விதி எண் 5 ஆக உள்ளவர்களுக்கு மிக அதிகபட்சமாக 27 ஆண்டுகள் யோக பலன் கிடைக்கும். பிறந்த திகதி 17, விதி எண் 6 ஆக உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக 33 ஆண்டுகளும் குறைந்த பட்சமாக 15 ஆண்டுகளும் யோக பலன் கிடைக்கும். பிறந்த திகதி 17, விதி எண் 7 ஆக உள்ளவர்களுக்கு 25 ஆண்டுகள் யோக பலன்கள்

**எஸ்.என்.ஹரிஜி**

கிடைக்கும். பிறந்த திகதி 17, விதி எண் 8 ஆக உள்ளவர்களுக்கு அவர்களின் எண்ணத்தைப் பொறுத்து 8 ஆண்டுகள் அல்லது 14 ஆண்டுகள் என்று இடைவெளி விட்டு யோக பலன்கள் கிடைக்கும்.

பிறந்த திகதி 17, விதி எண் 9 ஆக உள்ளவர்களுக்கு தொடர்ந்து யோக பலன்களைச் செய்து கொண்டே இருக்கும்.

தத்தம் செயல்களைப் பொறுத்து அளவுகள் மாறுபடும். மிக அதிகமாக 36 ஆண்டுகள் வரை யோக பலன் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

## கனகராயன் பகுதியில் புலிகளின் பாதாள சுரங்கம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் வவுனியா மாவட்டத்தின் கனகராயன் பகுதியில் பாதள சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களை மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

எல்லா ரக ஆட்லறி துப்பாக்கிகளுக்கும் பயன்படுத்தப்படும் 175 தோட்டாக்கள் இப் பாதாள சுரங்கத்தை உடைத்துக் கைப்பற்றப் பட்டுள்ளன.

அரச புலனாய்வு சேவைகள் பிரிவு மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் கடந்த 30 ஆம் திகதி தேடுதல்கள் நடத்தப்பட்டு இப்பாதாள சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியம்

### ருவான் விஜேவர்தன எம்.பி.தெரிவிப்பு

முன்கூட்டியே தேர்தலை நடத்தக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்குள் உட்பூசல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹொரண பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் பிரதிநிதிகளை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தில் இணைந்து கொண்ட பலர் அதிருப்பதியுடன் காணப்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு பல்வேறு வழிகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கதிரமலைச் சிவன் கோயிலில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சொ. சுந்தரசிவம் , உடுவில் கோட்டக் கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-பாலமுரளி)

# தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து புதிய கூட்டமைப்பை உருவாக்கத்திட்டம்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகள் மற்றுமொரு புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு அரசியல் கட்சிகள் இணைந்து இந்த கூட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட் டுள்ளதாகவும் தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்படுவதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி. ஆர்.எல்.எப் பத்மநாப பிரிவு, புளொட், தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இணைந்து இந்த கூட்ட மைப்பை உருவாக்கத்திட்டமிட்டுள்ளது.

இந்தக் கூட்டமைப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியையும் இணைத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் புதிய கூட்டமைப்பிற்கு இது வரையில் பெயர் சூட்டப்படவில்லை எனவும் பெயர் ஒன்று தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே நாட்டின் பிரதான இலக்காகும்

## பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே நாட்டின் பிரதான இலக்கு என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுத்துவதற்காக ஏதுக்களை கண்டறிவதற்கான காலம் மலர்ந்துள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு குறித்த யோசனைகளின் போது மிக அடிப்படையான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மட்டுமன்றி ஒவ்வொரு சமூகத்திற்கு உள்ளும் காணப்படும் பிளவுகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பான்மைவாத கோட்பாடுகளின் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட முடியாதெனவும் மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க சேவையில் சிறுபான்மை மக்களை உள்ளீர்த்தல் ஏற்கனவே கடமையாற்றி வருவோருக்கு இரண்டு மொழிகளிலும் பயிற்சிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஆபாசப் படங்கள் வெளியிடும் 300 இணையத்தளங்களுக்கு தடை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியூடாக ஆபாசப்படங்களைப்பார்வையிடும் இணையங்கள் 300 ஐத் தடை செய்ய அல்லது அவற்றைப் பார்வையிட முடியாதவாறு தடுப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்கும்படி பத்தரமுல்லை சிறுவர் மற்றும் மகளிர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு இவ்வாறு உத்தரவு விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இதுவரை மொத்தம் 547 இணையங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அவற்றுள் 185 இல் இலங்கை இளைஞர், யுவதிகள் மற்றும் சிறுவர்கள்இதில் பங்கெடுத்துள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# வாழைச்சேனையில் கிரான் பிரதேசத்தில் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச் சேனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கிரான் பிரதேசத்திலுள்ள கிரான் பிரதேசத்திலுள்ள தேக்கஞ் சேனை என்னுமிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் சிலவற்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் அவ்விடத்தை சோதனை செய்தனர்.

அப்போது, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ நிறையுடைய கிளைமோர் குண்டு மற்றும் சி.4 எனப்படும் ஒரு கிலோ நிறையுடைய வெடிமருந்துப் பொருட்கள், ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 183, ரி 56 ரக துப்பாக்கி மெகசீன் ஒன்று , வோக்கி டொக்கி ஒன்று என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட இவ் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துப் பொருட்கள் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ் வெடி மருந்துப் பொருட்கள் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)



யுத்த அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் துவிச்சக்கர வண்டிகளை வழங்கினார். துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொண்ட மாணவர்களை படத்தில் காணலாம்.




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1570 - வட கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக ஒல்லாந்தில் ஆயிரம் பேர் வரையில் இறந்தனர்.
- 1834 - முதன்முதலாக இந்தியாவில் இருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.
- 1868 - நியூசிலாந்து சீர் நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.
- 1889 - வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39ஆவது, 40ஆவது மாநிலங்களாக முறையே இணைந்தன.
- 1899 - தென்னாபிரிக்காவில் போவர்கள் பிரித்தானியர்கள் வசம் இருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.
- 1914 - ரஷ்யா ஒட்டோமான் பேரரசு மீது போரை அறிவித்தது.
- 1917 -பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.
- 1930 - ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.
- 1936 - இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி ரோம்-பேர்லின் அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.
- 1936 - பிபிசி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.
- 1936 - கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.
- 1953- பாகிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1963 - தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோடின் டியெம் Ngo Dinh Diem இராணுவப் புரட்சியை அடுத்து கொலைசெய்யப்பட்டார்.
- 1974 - தென்கொரியத் தலைநகர் சியோலில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 78 பேர் கொல்லப்பட்டனர்.
- 2000 - சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு முதன் முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.
- 2006 - பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

### பிறப்புகள்

- 1795 -ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது ஜனாதிபதி (இ. 1849)
- 1815 - ஜார்ஜ் பூல், ஆங்கிலேயக் கணித வியலாளர் (இ. 1864)
- 1965 - ஷாருக்கான், இந்தி நடிகர்

### இறப்புகள்

- 1903 - பரிதிமாற் கலைஞர் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரிகள், தமிழறிஞர் (பி.1870)
- 1917 -ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் (பி. 1858)
- 1950 - ஜோர்ஜ் பேர்னாட் ஷா, ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி. 1856)
- 1966 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1884)
- 1978 - ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர்



2007 - இலங்கை வான் படையின் விமானக் குண்டுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட் டனர்.



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளில் 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் சம்பியனான கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க.த.க.பாடசாலை அணியினரை படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

# குடிசன மதிப்பீட்டு நடவடிக்கையில் புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்த திட்டம்

(கொழும்பு)

30 வருடங்களின் பின்னர் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள 14ஆவது குடிசன தொகை மதிப்பீட்டு நடவடிக்கையின் போது புதிய தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுமென குடிசனத் தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தின் பணிப்பாளர் சுரன்ஜனா வித்தியாரட்ன தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச புள்ளிவிபரத்தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், கடந்த 1871 ஆம் ஆண்டு இலங்கையில் குடிசனத் தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் சார்க் அமைப்பு நாடுகளில் முதன் முதலாக குடிசன மதிப்பீட்டை மேற்கொண்ட நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றது.

இருப்பினும் அந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் எவ்வித புதிய அனுபவங்களையும் இலங்கைக்கு வழங்கவில்லை.

கடந்த கால்ங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் காரணமாக கடந்த 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நாடு தழுவிய குடித்தொகை மதிப்பீடு நடவடிக்கையின்போது 29 வீதமான தரவுகள் பெறப்படவில்லை.

அத்துடன் 8வீதமான மக்கள் தொகையும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

ஆசியாவின் அதிசயம் மிக்க இலங்கை என்ற இலக்கை அடைவதற்கு சரியான மதிப்பீடுகள் சகல துறைகளிலும் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

இதன் நிமிர்த்தம், சனத்தொகை , விவசாயத்துறை, வர்த்தக கைத்தொழில் துறை என்பவற்றின் மதிப்பீடுகளின் போது புதிய தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுமென குறிப்பிட்ட அவர் முதன்முதலாக சர்வதேச புள்ளிவிபரத் தினம் உலகில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் தவறான கொள்கைகளை விமர்சனம் செய்வோரை அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடாது

## ஹர்ஷ டி சில்வா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தொழில்சார் நிபுணர்கள் குண்டர் கூட்டங்களைப் போன்று செயற்படக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளை விமர்சனம் செய்வதற்காக மக்கள் மீது அடக்கு முறை பிரயோகிக்கப்படக் கூடாது எனவும் அநீதிக்கு எதிராக போராடும் மக்களை இல்லாதொழிக்கும் முனைப்புக்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஜனநாயக உரிமைகள் நிலை நாட்டப்படும் என பலர் எதிர்பார்த்த போதிலும் நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அரசாங்கத்தின் தவறான கொள்கைகளை விமர்சனம் செய்ய வேண்டியது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

துரதிஷ்டவசமாக எதிர்க்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக நல்லாட்சியையும் வெளிப்படைத் தன்மையும் தியாகம் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கைப் பொருளாதாரம் சாதகமான தன்மையைப் பதிவு செய்துள்ள போதிலும் அதன் ஸ்திரத்தன்மை குறித்து சந்தேகம் நிலவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உலகின் சுபீட்சமான நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு 59ஆவது இடம்

(கொழும்பு)

உலகின் சுபீட்சமான நாடுகளின் வரிசையில் இலங்கை 59 ஆம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் 110 நாடுகளில் இந்த மதிப்பீடு நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிராந்திய நாடுகளான பாகிஸ்தான், இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கையுடன் ஒப்பீடு செய்யும் போது மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லண்டன் லகடாம் நிறுவனத்தினால் வருடாந்தம் இந்தஆய்வு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

89 காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் நாட்டின் சுபீட்ச நிலைமை கணிப்பிடப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 68 ஆம் இடத்தை வகித்த இலங்கை இந்த ஆண்டில் 59 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதில் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியன முதன்மையாகக் கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)



யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை மாணவி ஒருவருக்கு சின்னம் சூட்டுவதையும் அருகில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பிரான்ஸில் தமிழ்ச்செல்வனின் சிலையை நிர்மாணிக்க இலங்கைத் தூதரகம் எதிர்ப்பு



பிரான்ஸில் நிர்மாணிக்கப்படவுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் சிலைக்கு தடை விதிக்குமாறுஅந்நாட்டு அரசாங்கத்திடம் பாரிஸிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கோரிக்கை விடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரான்ஸின் வடகிழக்கு பிராந்தியத்திலுள்ள லா கோர்னியூவ் நகர மேஜருக்கு எழுத்து மூலமான கோரிக்கைக் கடிதமொன்று மேற்படி உயர்ஸ்தானிகராலயத்தினால் கையளிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்தார்.

தமிழீழ வீடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழர் அதிகமாக வாழும் லா கோர்னியூவ் நகரில் மேற்படி சிலை நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான அடிக்கல் ஏற்கனவே நடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு ஜெர்மன் மற்றும் பிரான்ஸில் வாழும் இலங்கையர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் அதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு சார்பான இந்த வேலைத் திட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி நகர மேஜர் மற்றும் அந்நாட்டு ஜனாதிபதி ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2007 ஆம் ஆண்டுநவம்பர் மாதம்இலங்கை விமானப் படையினரால் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளரான சு.ப. தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அரிசி ஆலைகள் தொடர்பாக புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

அரிசி ஆலை உரிமையாளர்கள் தமது கையிருப்பிலுள்ள அரிசி மற்றும் நெல் விபரங்களை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு பிரகடனப்படுத்துவதை கட்டாயமாக்கும் வகையிலான சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மேற்படி சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டமூலத்தை தயாரிக்கும் பணிகள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாவும் கே.பி.ஜயசிங்க தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# உடல் உறுப்புகள்: எலும்புகள்

பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடு தான் முதுகெலும்பு உயிரினங்கள். இந்த உயிரினங்களுக்கு எலும்புகள் தான் உடலமைப்பைக் கொடுக்கின்றன. அவற்றின் தகவமைப்புக்கு ஏற்ப எலும்புகள் அமைந்துள்ளன. ஊர்வன, பறப்பன, பாலூட்டிகளில் மனிதனும் அடக்கம். மனித எலும்புகள் விசித்திரமான அமைப்பு கொண்டவை. அவை தான் மனிதனை நிமிர்ந்து நடக்கச் செய்கின்றன. மனிதனின் செயற்பாட்டிற்கும் ஆராதமாக உள்ளன. இந்த மனித எலும்புகளின் தன்மைகளைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

### மனித எலும்புகள்

எலும்பு என்பது மனிதனின் உடலுக்குள் காணப்படும் விறைப்பான, கடினத்தன்மை கொண்ட உறுப்பாகும். உடல் உறுப்புகளுக்கு பாதுகாப்பாக அமைந்து உடலைத் தாங்கும் உறுப்புகள்தான் எலும்புகள். மனிதனின் உடலமைப்பை நிர்ணயம் செய்வது எலும்புகள் தான். ஒரு இடம் விட்டு ஒரு இடத்திற்கு நகரவைப்பதும் எலும்புகள் தான். இவைகள் பாதிக்கப்பட்டால் மனிதன் அலங்கோலமான ஜந்துவாக மாறிவிடுவான். எலும்புகள் உடல் உறுப்புக்களை பாதுகாப்பதுடன் இரத்த சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவும் உள்ளன. மேலும் கனிமங்களை சேகரித்து வைக்கும் சேமிப்புக் கூடமாகவும் எலும்புகள் உள்ளன.

பொதுவாக எலும்புகள் பல வகையான வடிவங்களில் அமைந்துள்ளன. இவற்றில் சில சிறியனவாகவும், பெரியனவாகவும் காணப்படும். அதுபோல் மிகவும் உறுதியான எலும்புகளும் உறுதி குறைந்த எலும்புகளும் உள்ளன. இவை மனிதனின் அனைத்து உறுப்புக்களையும் பாதுகாப்பதற்கு தகுந்தவாறு உள்ளன.

எலும்பை உருவாக்கும் திசுக்களில் ஒரு வகை கனிமங்கள் நிறைந்துள்ளன. இவை தேன் கூட்டு அமைப்பை ஒத்துக் காணப்படும். முப்பரிமாண உள்ளமைப்புக்களைக் கொண்டு எலும்புகளுக்கு விறைப்புத் தன்மையை கொடுப்பது எலும்புத் திசுக்கள் தான். மேலும் எலும்புகளில் எலும்பு மச்சை, எண்புழை, நரம்பு, இரத்த அணுக்கள், குருத்தெலும்பு போன்றவை அடங்கும்.

உடலுக்கு ஆதாரமாக இருப்பதுடன் தசை நரம்புகளுக்கு பற்றுகோளாகவும்




இருப்பது எலும்புக் கூடுதான்.

மூளை, கண், இதயம், நுரையீரல் போன்ற மென்மையான உறுப்புகளுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு ஏற்றவாறு எலும்புகள் அமைந்துள்ளன. இந்த எலும்புகளில் 50 சதவீதம் நீரும் 33 சதவீதம் உப்புக்களும் 17 சதவீதம் மற்ற பொருட்களும் அமைந்துள்ளன.

எலும்பில் கல்சியம், பாஸ்பேட் போன்ற அமிலத்தில் கரையக்கூடிய தாதுப் பொருட்கள் நிறைந்துள்ளன. நமது உடல் நலத்திற்கு தேவையான கல்சியம் சத்துக்கள் அனைத்தும் எலும்புகளில் தான் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த கல்சியம் சத்துக் குறைந்தால் எலும்புகள் பலமிழந்து எளிதில் உடைந்து விடும்.

எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தியிருந்தால் தான் சீரான முறையில் அவைகள் செயற்பட முடியும். அவ்வாறு பொருந்தும் இடங்களுக்கு மூட்டுகள் என்று பெயர். அசையும் மூட்டு, அசையா மூட்டு என இரு வகை மூட்டுகள் உள்ளன. தலையிலும் இடுப்பிலும் காணப்படும் எலும்புகள் அசையா மூட்டுகள் ஆகும். அசையும் மூட்டுகள் நான்கு வகைப்படும்.

- பந்துக்கிண்ண மூட்டு
- கீழ் மூட்டு
- வழுக்கு மூட்டு
- சொக்கு மூட்டு

இந்த நால்வகை அசையும் மூட்டுகள் இயங்கும் போது அதிர்ச்சியோ , தேய்மானமோ ஏற்படாமல் இருப்பதற்கு எலும்புகளின் முனையில் குருத்தெலும்புகள் மூடப்பட்டு அதன் உட்புறத்தில் ஒரு மெல்லிய திசுப்படலம் அமைந்து அதில் ஒரு வழுவழுப்பான திரவம் சுரந்து மூட்டுக்களின் செயற்பாடுகளை எளிதாக்குகிறது. மேலும் மூட்டுகள் அசையும் போது எலும்புகள் நழுவாமல் இருக்க தசை நார்களால் பின்னப்பட்டுள்ளன.

எலும்புகளில் சின்ன எலும்பு காதில் உள்ள ஏந்தி என்ற எலும்பாகும். மிகப் பெரிய எலும்பு தொடை எலும்பாகும். மனிதனின் மார்புக் கூட்டில் மார்பெலும்புடன் விலா எலும்புகள் 24 உள்ளன. இவை 12 ஜோடியாக ஒரு கூடு போல் காட்சியளிக்கும். இவைகள் இதயம் நுரையீரல் போன்றவற்றைப் பாதுகாக்கிறது.

சாதாரணமாக பிறந்த குழந்தைக்கு 306 எலும்புகள் காணப்படும். பின் குழந்தை வளரும் போது படிப்படியாக பல எலும்புகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பெரிய வலுவான எலும்பாக மாறும். நன்கு வளர்ச்சியடைந்த மனிதனுக்கு 206 எலும்புகள் இருக்கும்.

தலைப்பகுதியில் அதாவது மண்டையோட்டில் 8 எலும்புகள் உள்ளன. அவை ஒன்றுடன்ஒன்று இணைந்து கடினமாக உள்ளன.

- மண்டையறை எலும்புகள்-8
- முக எலும்பு-14
- காது எலும்புகள்-6
  (மேலஸ் , இன்கஸ், ஸ்டேப்பிஸ்)
- தொண்டை எலும்பு-1
- தோள்பட்டை எலும்பு-4
  (காறை எலும்பு-2, தோள் எலும்பு-2)
- மார்புக் கூட்டில் -25
  (மார்பெலும்பு-1, விலா எலும்பு -24)
- முதுகெலும்புத் தூண் -24
- மேற்கைகளில்-6
- கைகளில் -54
- இடுப்புக்கூடு -4
- கால்களில் -8
- கால்களின் கீழ் பகுதியில் -52

மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. இந்த எலும்புகளின் அளவுகள் மனிதனுக்கு மனிதன் மாறுபடும். எலும்புகளைச் சுற்றி நரம்புகள் , தசை, தமணி, தசை நார்கள் போன்றவை பின்னிப் பிணைந்துள்ளன.

இந்த எலும்புகளின் சேமிப்புகளிலிருந்து தான் உடல் தேவையான கல்சியம், பாஸ்பேட் சத்துக்களை எடுத்துக்கொள்கிறது.

இதனால் முதுமையில் எலும்புகள் போதிய பலமின்றிக் காணப்படுகின்றன. இந்த எலும்புகள் நன்கு திடமாக இருக்க விற்றமின் டி அதிகம் தேவை. விற்றமின் டி குறைபாடு உண்டானால் எலும்பு மெலிவு நோய் உண்டாகும். இதனால் எலும்புகள் கல்சியம் சத்தை சேமித்து வைக்க இயலாமல் போய்விடும். இந்த எலும்பு மெலிவு நோய்க்கான அறிகுறிகள் எளிதில் கண்டறிய முடியாது. ஆனால் இவை வராமல் தடுக்க பல வழிமுறைகள் உள்ளன.

சிறு குழந்தைகளுக்கு சூரிய வெளிச்சம் படுவது நல்லது. இந்த சூரிய ஒளியில் தான் உடலுக்குத் தேவையான விற்றமின் டி அதிகம் கிடைக்கும். இதுதான் குழந்தை களின் வளர்ச்சிக்கும், வலுவுக்கும் முக்கிய மானது.

மேலும் எலும்புகள் பலப்பட கல்சியம் சத்து அதிகம் தேவை. இதனால் அதிக அளவு கல்சியம் சத்து நிறைந்த தண்டுக் கீரை, கர்ட், ரஞ்சு, பாதாம் பருப்பு, முட்டைக் கோஸ், தவிடு நீக்காத கோதுமை போன்றவற்றை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதுபோல பால், தயிர் , மீன் , முட்டை , வெண்ணெய் , முளை கட்டிய கொண்டைக்கடலை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.




## மருந்து... மாத்திரை... உணவு!



சில நோய்களுக்கான மருந்துகளை சாப்பிடும் கால கட்டத்தில் மிகுந்த ஆரோக் கியம் தருவ தாக நம்பும் உணவு வகைகளைக் கூட சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் எதிர் விளைவுகள் ஏற்பட்டு விடும்.

❖ தொற்றுநோயின் பாதிப்பிற்காக 'அன்டிபயோடிக்' மருந்துகள் சாப்பிடுவோர், பாலையும், 'யோகட்' உள்ளிட்ட பால் சார்ந்த உணவுப் பொருட்களையும் தவிர்க்க வேண்டும். இறைச்சியையும் ஒதுக்கிவிடலாம்.

❖ வயிற்றுப் போக்கை நிறுத்துவதற்கான மருந்துகளை வேறு எந்த மருந்துகளுடனும், குறிப்பாக 'அன்டிபயோட்டிக்கு'களுடன் எடுத்துக் கொள்ளாதீர்கள். இதனால் வயிற்றுப் போக்கு இன்னும் மோசமாகிவிடும்!

❖ ஒவ்வாமைக்காக மருந்து சாப்பிடும் போது, நெருப்பில் சுட்ட இறைச்சி, பசளிக் கீரை, முட்டை, வாழைப்பழம், ஸ்டோபரி போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

❖ தைரொய்ட் பிரச்சினைக்கு மருந்து எடுத்துக் கொள்ளும் போது, கல்சியம் செறிந்த உணவுகள், முட்டைக்கோஸ், சோயா பீன்ஸ் போன்ற உணவுகளைத் தவிர்த்திடுங்கள். வேறுவழியின்றி சாப்பிடுவதாக இருந்தாலும் தைரொய்ட் மருந்து சாப்பிட்டு பல மணி நேரம் கழித்து மிகக் குறைந்த அளவே சாப்பிட வேண்டும்.

❖ நீங்கள் வலி நிவாரணி மருந்து எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அதிகமரக இலைக் காய்கறிகளைச் சாப்பிடாதீர்கள். அவை மருந்தின் வேகத்தை மட்டுப்படுத்தும்.

❖ மாத்திரைகளை வெந்நீர் அல்லது சூடான பானத்துடன் சாப்பிடும் வழக்கமுள்ளவரா? அதைத் தவிர்த்திடுங்கள். சூடானது, மாத்திரைகளின் திறனைப் பாதிக்கலாம்.

❖ மருந்தைச் சாப்பிடும் கஷ்டம் தெரியாமலிருக்க அதை உணவுடன் கலந்து சாப்பிட நினைக்கிறீர்களா? வேண்டாம். மருத்துவர் ஆலோசனை இல்லாமல் சாப்பிட வேண்டாம்.

## வேண்டாத பழக்கங்களால் விபரீதம்!

விரல் சூப்புதல், காதை குடைதல், பற்களை குத்துதல் , மூக்கை துழாவுதல் என்று பலருக்கு இந்தப் பழக்கங்கள் தொட்டில் பழக்கமாய் தொடரும்.

குழந்தையாக இருக்கும் போது இந்தப் பழக்கம் இருந்தால், 'அதெல்லாம் சரியாகிவிடும்' என்று ஆரம்பத்தில் மெத்தனமாக விட்டு விடுவோம். ஆனால் , இது போன்ற பழக்கங்கள், உடலில் பல பிரச்சினைகளுக்கு வழிவகுத்து விடும்.

தொடக்கத்தில் , காதை குடைந்தால் ஏதோ ஒன்று சரியாகிவிடும் என்ற மனோபாவத்தில் அதைத் தொடருவார்கள். இதனால் காதுக்குள் புண், செவிக்குள் இருக்கும் ஜவ்வு கிழிந்து காது கேட்காத சூழ்நிலை ஏற்படும்.

மூக்கை துழாவுதலும் இப்படித்தான். மூக்கினுள் இருக்கும் இரத்த ஓட்டங்கள் நிறைந்த பகுதி பாதிப்புக்கு உள்ளாகும். இதனால் காற்றில் இருக்கும் தூசுகளை அகற்ற உதவும் ரோமங்கள் உதிர்ந்து, அசுத்தம் கலந்த காற்று நுரையீரலுக்குச் செல்ல வழிவகுக்கும். சில குழந்தைகள் மூக்கை அடிக்கடி உறிஞ்சிக் கொண்டே இருப்பார்கள். இதனால் மூளையில் உள்ள சிறு நரம்புகள் பாதிக்கப்படலாம். இதனால் குழந்தைப் பருவத்திலேயே மூக்கைச் சிந்தும் பழக்கத்தை உருவாக்க வேண்டும்.



விரல் சூப்பும் பழக்கம் தொடர்ந்தால் வாயினால் சுவாசிப்பார்கள். இதனால் பற்கள் மேல் நோக்கிவளரும். குழந்தைகள் பாதுகாப்பின்மை காரணமாக, மனதளவில் ஒரு துணைக்காக விரலை சூப்புகின்றனர்.

# இந்தோனேசியாவில் சுனாமி அனர்த்தத்தால் பலியானோர் எண்ணிக்கை 449 ஆக உயர்வு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சுனாமியால் பலியானோரின் எண்ணிக்கை 449 ஆக உயர்ந்துள்ளது. மேலும் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ள 96 பேரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த ஒரு வார காலமாக இந்தோனேசியா,எரிமலைச் சீற்றம், நிலநடுக்கம் மற்றும் சுனாமி என அடுத்தடுத்து இயற்கைப் பேரிடர்களில் சிக்கித் தவித்து வருகிறது.

சுமத்ரா தீவு அருகே உள்ள மென்டாவாய் தீவுகள் தான் சுனாமியால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை வடக்கு பகாய் தீவில் காணாமல் போனதாகக் கருதப்பட்ட 135 பேர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் சுனாமியில் சிக்கி இறந்தோரின் எண்ணிக்கை 449 ஆக உயர்ந்துள்ளது. 96 பேர் காணாமல் போயுள்ளனர். சுனாமியில் சிக்காமல் உயிர் பிழைத்த தனி நபர்கள் சிலர் தனித்தனியாக முகாம்களுக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

ஒருசிலர் தங்கள் சொந்த கிராமத்துக்குச் சென்றுள்ளனர். இறந்தவர்களில் பெரும்பான்மையோர் மண்ணில் சிக்கித்தான் பலியாகியுள்ளனர் என்று அந்நாட்டு இயற்கைப் பேரிடர் மேலாண்மை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மீட்புப் பணியில் கூடுதலாக இரண்டு ஹெலிகொப்டர்கள் வரலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

## ஒபாமாவின் குழுவில் இந்திராநூயிக்கு இடம்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விரைவில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொள்கிறார். இரு தரப்பு உறவை பலப்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

ஒபாமாவுடன் அமெரிக்காவைச் சேர்ந்த 200 தொழிலதிபர்கள் அடங்கிய குழுவும் இந்தியா வருகிறது. இக்குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும் பெப்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாகியுமான இந்திரா நூயியும் வருகிறார். (ஸ்ரீ)




## ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியுடன் தலிபான் முக்கிய தலைவர்கள் இரகசிய சந்திப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அல்–கொய்தா, தலிபான்களுக்கு எதிராக அமெரிக்க கூட்டுப் படைகள்சண்டை நடத்தி வரும் வேளை யில் ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயை, தலிபான் முக்கிய தலைவர்கள் திடீரென இரகசியமாக சந்தித்து பேசியது பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் அமைதிக்குழுவினை நியமித்துள்ளார். இதில் பல்வேறு பிரிவினைவாத அமைப்புக்கள் உள்ளன.

இந்நிலையில் தலிபான்கள் மற்றும் அல் கொய்தா அமைப்பைச் சேர்ந்த 3 முக்கிய தலைவர்கள் ஜனாதிபதி ஹமீத் கர்சாயை இரகசியமாக சந்தித்து பேசியுள்ளனர். இவர்களில் சிராஜ்ஜுதீன், மௌல்வி, அப்துல் கபீர், சைத்ரி அஸம் ஆகியோர் ஆவர். இந்த சந்திப்பு காபூலில் நடைபெற்றதாக கூறப்படுகிறது. (ஸ்ரீ)

## ஈராக் கிறிஸ்தவ தேவாலயத்தில் தீவிரவாதிகளுடன் துப்பாக்கி சண்டை

### 37 பேர் பலி;90 பேர் மீட்பு

(பக்தாத்)



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பங்கு சந்தை அலுவலகம் உள்ளது. நேற்று காலை அங்கு துப்பாக்கியுடன் 9 தீவிரவாதிகள் புகு ந்தனர். அவர்களை பார்த்ததும் அங்கிருந்த பாதுகாவலர்கள் அவர்களை துப்பாக்கியால் சுட்டனர்.

இதை தொடர்ந்து நடந்த துப்பாக்கி சண்டையில் 2 பாதுகாவலர்களை தீவிரவா திகள் சுட்டுக் கொன்றனர். தகவல் அறிந்ததும் இராணுவத்தினர் அங்கு விரைந்து சென்றனர்.

இராணுவத்தினரை பார்த்த தீவிரவாதிகள் அதன் அருகேயுள்ள சயிதாத் அல் அநஜாத் என்ற கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்தனர். அப்போது அங்கு பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து அங்கு பிரார்த்தனை க்கு வந்த 120 பேரையும் 2 பாதிரியார்களையும் பிணைக்கைதிகளாக பிடித்தனர்.அவர்களை துப்பாக்கி முனையில் வைத்து மிரட்டிக் கொண்டிருந்தனர். இதை தொடர்ந்து தீவிரவாதிகளிடம் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் இருந்த 30 பேர் உயிரிழந்தனர். இராணுவ வீரர்கள் 7 பேர் பலியானார்கள். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் பாதிரியாரும் கன்னியாஸ்திரியும் அடங்குவர். இவர்கள் உட்பட 90 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய தீவிரவாதிகள் ஈராக்கில் உள்ள அல்–கொய்தா தீவிரவாதி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

கிறிஸ்தவ தேவாலயத்தில் பிடித்து வைத் திருந்த பிணைக் கைதிகளை விடுவிக்க சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பெண் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என தொலைபேசியில் கோரிக்கை விடுத்தனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஸ்ரீ)

## பிரேசிலின் புதிய ஜனாதிபதியாக டில்மா ரௌசெப் தெரிவானார்

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக டில்மா ரௌஸெப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் போட்டியிட்ட டில்மா ரௌஸெப் 58 சதவீத வாக்குகளையும் எதிரணி வேட்பாளரான சா போலா மாநில முன்னாள் ஆளுநர் ஜோஸ் ஸெரா 42 சதவீத வர்க்குகளையும் பெற்றனர்.

62 வயதான டில்மா ரௌஸெப் பிரேஸிலின் முதலாவது பெண் ஜனாதிபதியாவார். பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள தற்போதைய ஜனாதிபதி லூலாடி-சில்வாவின் ஆதரவாளரான டில்மா எதிர்வரும் ஜனவரி மு[illegible]லாம் த்கத் [illegible]

இவர் ஒரு முன்னாள் கெரில்லா போராளி என்பது குறிப்பிடத்தக்கது. 1964-1985 காலப்பகுதியில் பிரேஸிலில் இருந்த இராணுவ சார்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிய தேசிய விடுதலைப் படை எனும் தீவிரவாத இயக்கத்தின் அங்கத்தவர் இவர்.



தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நாடான பிரேஸிலின் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டில்மா ரௌஸெப் உலகின் மிக சக்தி வாய்ந்த பெண்ணாக விளங்குவார் எனக் கருதப்படுகிறது.

[illegible] ஒழிப்பதற்காக தான் பாடுபடப் போவதாக டில்மா கூறியுள்ளார். அதேவேளை பிரேஸிலில் நடைபெறவுள்ள 2014 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண கால் பந்தாட்ட போட்டிகள் 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதும் அவர் எதிர்நோக்கும் முக்கிய சவால்களாக இருக்கும். (ஸ்ரீ)



கடந்த 1953 ஆம் ஆண்டு கொரியப் போரின் போது வட, தென்கொரியா என பிரிந்தது. அப்போது பிரிந்த உறவினர்கள் கிம்ஹாசோக் (83), கிம்ஹே-டியு(79) ஆகியோர் 60 ஆண்டுகளுக்கு பின் தென்கொரியாவில் உள்ள ஒரு சுற்றுலா மையத்திற்கு வந்த போது சந்தித்தனர்.

## ஏமனிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்ட விமானங்களில் சக்திவாய்ந்த வெடிபொருட்கள்

### ஏமன் இளம் பெண்ணை கைது செய்து விசாரணை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ் விழாவை சீர்குலைக்கும் நோக்கத்துடன் நைஜீரிய வாலிபர் மூலம் வெடிபொருள் அனுப்பிய தனிநபர் அல்லது குழு தான் இப்போதும் அதே ரக வெடிபொருட்களை அனுப்பியிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் ஏமன் நாட்டின் இச்சம்பவத்தோடு தொடர்புடைய ஓர் இளம் பெண்ணைக் கைது செய்து அந்நாட்டு அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இருநாட்களுக்கு முன் ஏமன் நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்ட இரு விமானங்களும் டுபாய் மற்றும் லண்டனின் கிழக்கு மிட்லேண்டஸ் விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்ட போது அவற்றில் சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

அந்த வெடிபொருட்கள் குறித்துப் பல தகவல்கள் வெளியாகி வருகின்றன. இரு விமானங்களிலும் பிரின்டர் கருவியில் பயன்படுத்தப்படும் டோனர் கேட்ரிட்ஜ் ஜுக்குள் சக்தி வாய்ந்த வெடிபொருள் வைக்கப்பட்டு அதில் கைத்தொலைபேசியின் ஒரு சிப் வைக்கப்பட்டு அதனுடன் வயர் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. வெளியில் இருந்து கைத்தொலைபேசி மூலம் இதை இயக்கினால் விமானம் சுக்கு நூறாகி விடும்.

இதுகுறித்து பிரிட்டன் அதிகாரிகள் கூறுகையில், இந்த வெடிபொருள் மிக கவனத்துடன் வைக்கப்பட்டுள்ளது. தொழில் முறை ரீதியில் இதைச் செய்துள்ளனர் என்றனர்.

இதற்கிடையில் ஏமன் நாட்டின் தலைநகரான சீனாவின் மருத்துவத்துறையில் பட்டப்படிப்பு படித்து வரும் ஓர் இளம் பெண்ணை அந்நாட்டு அதிகாரிகள் இவ்வழக்குத் தொடர்பாக கைது செய்து விசாரித்து வருகின்றனர். அவரது உறவினர் பெண் ஒருவரையும் விசாரித்து வருகின்றனர்.

இச்சம்பவத்தை அடுத்து ஏமனில் இருந்து பிரிட்டனுக்கு வரும் அல்லது பிரிட்டன் வழியாகச் செல்லும் அனைத்து சரக்குப் போக்குவரத்தையும் அந்நாட்டு அரசு நிறுத்தி வைத்துள்ளது. (ஸ்ரீ)

மன்னிப்பு உணர்வில் கிடைப்பது போன்ற ஆனந்தம் வேறெதிலும் கிடைப்பதில்லை.

– ஸ்ரீஅன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ரிசானாவின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும்

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சகோதரி ரிசானாவின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் தார்மிகப் பொறுப்பு எமக்குண்டு.

தமிழ் மக்களாகிய நாம் பட்ட துன்பங்கள், துயரங்கள் ஏராளம். அதிலும் நாம் அனுபவித்த உயிரிழப்புத் தரும் வேதனை சொல்லுந்தரமன்று.

அத்தகையதொரு வேதனையைத் தரக்கூடிய தீர்ப்பை சகோதரி ரிசானா பெற்றிருப்பது ஜீரணிக்கக் கூடியதல்ல.

ரிசானாவின் கவனவீனத்தால் குழந்தையொன்று உயிரிழந்ததென்ற செய்தி எல்லோரையும் ஆழ்ந்த துயரத்துக்கு இட்டுச் செல்லும். எனினும் ஒரு துன்பம் நடந்துவிட்டது என்பதற்காக இன்னொரு துன்பத்தை தோற்றுவிப்பது மனுதர்மமாகாது.

துன்பத்திலும் மன்னித்து வாழவிடுவதே மனிதப் பண்பின் சிறப்பு. அதேநேரம் பிரஸ்தாபக் குழந்தையை கொல்லவேண்டும் என்ற எண்ணம் ரிசானாவிடம் இம்மியும் இருந்திருக்க நியாயமில்லை.

எனவே தவறுதலாக இடம்பெற்ற அந்தத் துயரத்துக்காக இன்னுமொரு துயரத்தை மானிடம் வழங்குமாயின் இந்த உலகில் தெய்வீக நம்பிக்கைகள் பலவீனப்பட்டுவிடும்.

மரணத்தை ஏற்படுத்துவது என்பதில் 'நோக்கம்' பற்றியும் நோக்குவது அவசியம்.

அதாவது மருத்துவர் ஒருவர் நோயாளி ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார். அறுவைச் சிகிச்சையின் போது அந்த நோயாளி இறந்துவிடுகிறார்.

அறுவைச்சிகிச்சை செய்யாமல் இருந்திருந்தால் அந்த நோயாளி சிலகாலம் வாழ்ந்திருக்கக்கூடும். இந்நிலையில், நோயாளியின் மரணத்திற்கு சத்திரசிகிச்சை செய்த டாக்டரே காரணமென்று கூறி அவரை சிறையிலடைக்கும் வழமைகள் எதுவும் கிடையாது.

இங்கு குறித்த மருத்துவரின் நோக்கம் பற்றியே சிந்திக்கப்படுகின்றது. நோயாளியைக் காப்பாற்றுவதே அவரின் நோக்கம். எனவே மரணத்திற்கான குற்றம் அவரை அணுகாது.

இதுபோன்றதுதான் ரிசானாவின் சம்பவமும். குழந்தைக்குப் பால்கொடுக்க நினைத்தமை குழந்தையின் பசி போக்கும் நோக்குடையது.

அந்த நல்ல நோக்கு துரதிர்ஷ்டமான முடிவைத் தந்துவிட்டது. அந்த முடிவை அடிப்படையாகக் கொண்டும் ரிசானாவின் வயது மற்றும் உறவுகளை விட்டு நாடுகடந்து தனித்திருந்து வீட்டு வேலைகளைக் கவனித்ததினால் ஏற்படக்கூடிய மனநிலை என்பவற்றையும் கருத்திற் கொண்டு ரிசானாவிற்கு சவுதி அரசு பொது மன்னிப்பு வழங்கவேண்டும்.

இந்த மன்னிப்பை வழங்குவதன் மூலம் சவுதி அரசு தனது பெரும்தன்மையை நிரூபித்துக் காட்டமுடியும்.

ரிசானாவின் விடுதலைக்காக நாமும் குரல் கொடுப்போம். பிரார்த்திப்போம்.

# பாடசாலை மட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண கல்வி வலயமட்ட, பாடசாலை மட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு,

**தமிழ்**

தரம் 06- முதலாமிடம் பிரேமச்சந்திரக்குருக்கள் நர்த்தனசர்மா (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), இரண்டாமிடம் தர்மிகா புவனேஸ்வரன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் கீதப்பிரியா மனோகரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி.

தரம்07- முதலாமிடம் நிர்மலேஸ்வரன் டிலக்செஸ்வரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), இரண்டாமிடம் சிவாணி யோகராஜசிங்கம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் கஜவாணி கணனேந்திரன் (யா/இந்து மகளிர் கல்லூரி).

தரம்08- முதலாமிடம் லிங்கரட்ணம் சுபாகரன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), தேனுகா சோமஸ் கந்தசாமி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் கவிப்பிரியா மனோகரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி).

தரம்09- முதலாமிடம்: லக்ஸனா சிவகுமாரன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்: வித்தியா சிவசங்கரநாதன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்: பிரியங்கா மரியதாஸ் குரூஸ் (திருக்குடும்ம கன்னியார் மடம்)

தரம்10- முதலாமிடம்: பிரணவி தியாகமூர்த்தி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்: கௌசல்யா பாலசுப்பிரமணியம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்: பாணுசா அர்ச்சுனராஜ் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம்11- முதலாமிடம்: இராஜேஸ்கரன் ஜதுசன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), இரண்டாமிடம்: சாம்பவி யோகேந்திரராஜ் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்: நகுலநாதன் லவலோயன் (யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரி)

**ஆங்கிலம்**

தரம்06- முதலாமிடம்: யோ.பிரவீன் (பரியோவான் கல்லூரி), தே.மதுமிலன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) மூன்றாமிடம்:எ.காஸ்றோ டிறோன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

தரம்07- முதலாமிடம்: சு.சுபநிலா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்: ந.லலிதாயினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்: யோ.கேசினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம்08- முதலாமிடம்: இ.கீர்த்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்: பி.கரணி(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ப.மேசிகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

தரம் 09- முதலாமிடம்: இ.அர்ச்சுலன் (யா/பரியோவான் கல்லூரி), இரண்டாமிடம்: சி.சர்வக்னன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), மூன்றாமிடம்: உ.தேனுகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தரம்10- முதலாமிடம்: ச.சாரங்கா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்: பா.தருகீசன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), மூன்றாமிடம்: ஜெ.கிரோன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

தரம்11- முதலாமிடம்: இ.பிரணவன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), இரண்டாமிடம்: க.நிசாந்தினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம்: ம.அன்ரனிஅருள்மலர் (திருக்குடும்ப கன்னியார்மடம்). (ச-7)

# மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு ஆயுள்தண்டனை வழங்குவது குறித்து ஆராய்வு

## அமைச்சர் டியூ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நீதிமன்றங்களில் மரணதண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கு ஆயுள்தண்டனை அளிப்பது பற்றி ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கடந்த 2009 ஆண்டு மட்டும் இலங்கையில் 29 ஆயிரத்து 151 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனைபெற்றும், விளக்கமறியலில் வைக்கப்பட்டும் உள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் சுமார் 22 ஆயிரம் அளவிலானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் சந்தேகத்தின் பேரில் பெருமளவான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ள போதும் மரணதண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் தமிழர்களை விட பாரிய குற்றங்களில் ஈடுபட்டிருந்தமைக்காக சிங்களவர்களே அதிகளவில் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இவ்வாறான நிலையில்தான் மரண தண்டனைக் கைதிகளுக்கு ஆயுள்தண்டனை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக அறியக்கிடைத்துள்ளது. (ச-5)

# கொழும்பிலிருந்து வந்து தேடுதல்

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 200 பேர் வடமராட்சியில் கைது

(கரவெட்டி)

யாழ்ப்பாணம் வடமராட்சிபிரதேசத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 200 குடும்பங்கள் கொழும்பு மின்சார சபையின் முகாமையாளர் என்.சேனரத்ன தலைமையிலான குழுவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி பிரதேச பொலிஸ் பிரிவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, வடமராட்சி பிரதேசத்தின் 200 குடும்பங்கள்கைதுசெய்யப்பட்டுபருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவ்வழக்குகளை விசாரித்த நீதிபதி, ஒவ்வொரு குடும்பத்தினரும் தலா பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணமும் மின்சார சபைக்காக ஆறாயிரத்து எழுநூற்று இருபது ரூபாய் நட்டஈடுமாக பதினாறாயிரத்து எழுநூற்று இருபது ரூபாய் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் ஆகக்கூடிய தண்டப்பணமாக ஒருவரிடம்இரண்டுலட்சத்துஇருபத்தொன்பதாயிரத்து எழுநூற்று இருபது ரூபாய் அறவிடப்பட்டது. (ச-5)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலுதவிச் சங்கத்தினால் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த முல்லை வலயப் பாடசாலைகளின் முதலுதவி விரிவுரையாளர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நாளை மறுதினம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு மாகாவித்தியாலயத்தில் நடைபெறும் என சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (ச-2)

# சிறுவர் பூங்கா திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் சிறுவர் பூங்கா திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் கா.ரவீந்திரராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச-2)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



ஆன்மா தெய்வீகமானது. ஆனால் , சடப் பொருளின் கட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று வேதங்கள் கூறுகின்றன. இந்தக் கட்டு அவிழும் போது ஆன்மா நிறை நிலையை அடைகிறது.அந்த நிலை முக்தி. முக்தி என்பது விடுதலை என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. விடுதலை- நிறைவுறாத நிலையிலிருந்து விடுதலை, மரணத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் விடுதலை.

கடவுளின் கருணையால்தான் இந்தக் கட்டு அவிழும்.அந்தக் கருணை தூயவர்களுக்குத்தான் கிட்டும். எனவே , அவனது கரு ணையைப் பெறுவதற்குத் தூய்மை அவசியம் என்றாகிறது. அந்தக் கருணை எப்படிச் செயற்படுகிறது? தூய உள்ளத்தில் அவன் தன்னை வெளிப்படுத்துகிறான். ஆம், தூயவர்களும் மாசற்றவர்களும் இந்தப் பிறவியிலேயே கடவுளைக் காண்கின்றனர். அப்போது தான் இதயக் கோணல்கள் நேராகின்றன, சந்தேகங்கள் அகல்கின்றன. காரண காரியம் என்ற பயங்கர விதி அவர்களை அணுகுவதில்லை.

இதுதான் இந்து மதத்தின் மையமும் , அதன் முக்கியமான அடிப்படைக் கருத்துமாகும்.



யுத்தத்தினாலும் அனர்த்தங்களினாலும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் சிறுவர், யுவதிகளுக்கான காப்பகம் நேற்று காலை அச்சுவேலி வைத்தியசாலைக்கருகாமையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகாரத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த நாடாவெட்டி திறந்துவைப்பதையும் அமைச்சர், யாழ்.அரச அதிபர் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரமில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசியப் பாடசாலை ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கோ, மாகாண பாடசாலை ஆசிரியர்களை தேசியப் பாடசாலைகளுக்கோ இடமாற்றம் செய்யும் அதகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கோ, வலயக் கல்விப் பணிப்பாளருக்கோ வழங்கப்படவில்லையென கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக மாகாணப் பாடசாலை ஆசரியர்களை தேசியப் பாடசாலைகளுக்கும் தேசியப் பாடசாலை ஆசிரியர்கள் மாகாணப் பாடசாலைகளுக்கும் சில மாகாண, வலய கல்விப் பணிப்பாளர்களால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை இரத்து செய்யுமாறு அவர் கேட்கப்பட்டுள்ளார். ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் எ்திர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்குமாறும் மூன்றாம் தவணைக்காலத் தினுள் இடமாற்றம் மேற் கொள்ளப்படக்கூடாது எனவும் அறிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டிலுள்ள 326 தேசியப் பாடசாலை நடவடிக்கைகளை மேற் பார்வை செய்வதற்கென கல்வி அமைச்சின் 20 கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நாடளாவிய ரீதியில் உள்ள அரச பாடசாலைகளுக்கான நீர் விநியோக கட்டணத்தை சலுகை அடிப்படையில் அற விடுவதில்லையென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சிற்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இதற்கான முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலைகளின் நீர்க் கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லையென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# சகல மாவட்டங்களிலும் சிறுவர் தடுப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அனைத்து மாவட்டங்களிலும் சிறுவர் தடுப்பு மத்திய நிலையங்களை அமைக்க நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், திருகோணமலை, அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இதுபோன்ற நிலையங்களை அமைக்க ஏற்கனவே காணிகள் இனம் காணப்பட்டுள்ளன.

இதேவேளை தற்போது நாடளாவிய ரீதியில் தொண்டர் அடிப்படையில் இயங்கி வரும் சிறுவர் இல்லங்களில் சிலவற்றைத் தெரிவு செயது அவற்றையும் சிறுவர் தடுப்பு மத்திய நிலையங்களாக மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சட்ட நடவடிக்கைகளுக்கு இலக்காகியுள்ள சிறுவர்களை இந்த நிலையங்களில் தற்காலிகமாக தடுத்து வைக்கவும் அவர்களுக்கான சட்ட நடவடிக்கைகளுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் மேலும் பாதுகாப்பு வழங்கவும் இந்த நிலையங்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள சிறுவர்களும் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் இதன் பின்னர் இவ்வாறான நிலையங்களில் வேறுபடுத்தியே வைக்கப்படுவர்கள் என்று அதன் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கான வெளிநோயாளர் பிரிவு

புங்குடுதீவு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

அப்பிரதேச மக்கள் வெளிநோயாளர் பிரிவில் சென்று சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இளமையான நாடுகள் பட்டியலில் சீனாவை முந்துகிறது இந்தியா

(சிட்னி)

இந்த நூற்றாண்டு முடிவதற்குள் இளைஞர்கள் அதிகம் வசிக்கும் நாடுகள் பட்டியலில், சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடம் பிடிக்கும் என அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் ஜோன் ஹவார்ட் கூறியுள்ளார். லசாரஸ் ரைசிங் என்ற தனது சுயசரிதை நூல் விளம்பர நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஹவார்ட் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இப்போது பொருளார வளர்ச்சியில் உலகிலேயே சீனா முதலிடத்தில் உள்ளது. அதேநேரம் ஒரு குழந்தை பெற்றுக்கொள்ளும் திட்டம் அங்கு நடைமுறையில் இருப்பதால் இளைஞர்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து முதியவர்கள் நாடாக மாறி வருகிறது. இதனால் அடுத்த சில ஆண்டு களில் இளைஞர்களை விட வயதானவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.இது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும்.

இளைஞர்கள் எண்ணிக்கையில் உலக அளவில் இப்போது இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆனால் 21 ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் சீனாவை பின்னுக்குத் தள்ளி இளமையான நாடுகள் பட்டியலில் முதலிடம் பிடிக்கும்.இதனால் ஆசியாவின் மிகப் பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுக்கவும் வாய்ப்பு உள்ளது.

உலக அரங்கில் சீனா மிகப் பெரிய சக்தியாக உருவெடுத்து வருவதாகக் கூறப்படுகிறது. எனினும் இராணுவ பலம் மற்றும் பொருளாதாரத்தில் அமெரிக்காவை ஒருபோதும் அதனால் மிஞ்ச முடியாது.

மேலும்,சீனா பொருளாதார விடயத்தில் வெளிப்படையாக இல்லாமல் கடும் கட்டுப்பாடுகளுடன் இருந்து வரும் நிலையில் இப்போது உள்ள வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்விக் குறி எழுந்துள்ளது. இவ்வாறு ஹவார்ட் தெரிவித்தார். (ஸ்ரீ)

# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு பெற்ற பிள்ளைகளால் தான் ஆபத்து

## தா.பாண்டியன் தெரிவிப்பு

தமிழக முதல்வா [illegible] நிதிககு கம்யூனிஸ்டுகளால் ஆபத்தில்லை. அவர் பெற்ற பிள்ளைகளால் தான் ஆபத்து என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், கோட்டூரில் கட்சியின் ஒன்றிய அலுவலகத் திறப்பு விழா [illegible]ற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் [illegible]லந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



தமிழகத்தில் எது நடந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியை விமர்ச்சித்து வருகிறார் முதல்வர் கருணாநிதி.

தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கம்யூனிஸ்டுகளால் ஆபத்தில்லை. அவர் பெற்ற பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகளால் தான் ஆபத்து.

தற்போதுள்ள சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியில் நீடித்தி ருக்குமா என்பது சந்தேகம்.

காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க கூட்டணிக்கு வந்தால், அங்கு கம்யூனிஸ்டுகளுக்கு இடமில்லை என்பதற்காகத்தான் கருணாநிதி கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பார்த்து ஏமாறப் போகிறீர்கள் என்கிறார்.

அர்ச்சகர்கள் தொடங்கி பல தரப்பினரும் அரசு கடைப்பிடிக்கும் தவறான கொள்கை காரணமாக அரசுக்கு எதிராக திரண்டுள்ளனர்.

இந்நிலையில் ,பா.ம.க மற்றும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் அ.தி.மு.கவுடன் இணைந்தால் வரவுள்ள தேர்தலில் தி.மு.கவுக்கு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்து கூட கிடைக்காது.

தேர்தலில் சரிவு ஏற்பட்டதால் சோர்ந்து விடும் இயக்கமல்ல கம்யூனிஸ்ட் இயக்கம். அடுத்த 10ஆண்டுகளில் இந்தியாவையும் உழைக்கும் மக்களையும் மோசடி அரசியலிலிருந்து விடுவிப்போம் என திகதி குறித்துக் கொண்டு கம்யூனிஸ்ட்கள் பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

# ரோபோ தாக்கி இளம்பெண் பலி ஸ்ரீபெரும்புதூரில் சம்பவம்

சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தனியார் செல்போன் தொழிற்சாலையில் ரோபோ தாக்கி இளம்பெண்ணொருவர் பலியானார்.

திருவெண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த டி.புத்தூரை சேர்ந்த அம்பிகா (வயது-22) என்பவர் ஸ்ரீபெரும்புதூர் தனியார் செல்போன் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார்.

இவர் நேற்று முன்தினம் தொழிற்சாலையில் உள்ள ரோபோ பிரிவில் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக ரோபோ ஒன்று இளம் பெண் அம்பிகாவை தாக்கியது.

இதில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவரை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இந்தச் சம்பவம் குறித்து ஸ்ரீ பெரும்புதூர் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நம்பர்–1 அந்தஸ்தை இழந்தார் டைகர்உட்



கடந்த 5 ஆண்டுகளாக கோல்ப் ஆட்டத்தில் முடிசூடா மன்னனாக திகழ்ந்த டைகர்உட் முதன்முறையாக நேற்று முன்தினம் தனது நம்பர்– 1 அந்தஸ்தை இழந்தார்.

அவரது பெயர் முதலிடத்தில் இல்லாமல் பட்டியல் வெளியிடப்பட்டது. இங்கிலாந்தைச் சேர்ந்த லீ வெஸ்டுட் புதிய ஹீரோவாக நம்பர்– 1 இடத்தைப் பெற்றுள்ளார்.

# இளம் வீரர்கள் சாதிப்பார்கள் டானியல் விக்டோரி நம்பிக்கை

(அகமதாபாத்)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இளம் வீரர்கள் சாதிப் பார்கள் என நியூசிலாந்து அணித் தலைவர் டானியல் விக்டோரி நம் பிக்கை தெரிவித்துள்ளார்.



இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட் 5 ஒரு நாள் போட் டிகள் கொண்ட தொடரில் பங்கேற் கிறது. முதல் டெஸ்ட் நாளை மறு தினம் அகமதாபாத்தில் ஆரம்பமா கிறது. இதற்காக விக்டோரி தலை மையிலான நியூசிலாந்து அணி யினர் கடந்த சனிக்கிழமை அகம தாபாத் சென்றனர். இத் தொடர்குறித்து அணித்தலைவர் டானியல் விக்டோரி கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான தொடர் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில் சமீபத்தில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக கண்ட மோசமான தோல்வியால் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

இந்திய அணி சமீப காலமாக அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வரு கிறது. எனவே இத் தொடர் எங்களுக்கு சவால் நிறைந்ததாக இருக்கும்.

எங்கள் அணியில் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை முதல்தர போட்டியில் விளையாடிய அனுபவம் பெற்ற இளம் வீரர்கள் நிறைய உள்ளனர். இவர்கள் இத் தொடரில் சாதிப்பார்கள் என நம் புகிறேன். இவர்களது திறமையை வெளிப்படுத்த இந்திய தொடர் நிச்சயம் கைகொடுக்கும்.

இதன்மூலம் இவர்கள் தேசிய அணியில் நிரந்தர இடம்பிடிக்க வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு டானி யல் விக்டோரி கூறினார்.

# வண்ணமயமான விருது வழங்கும் விழா பாலிவூட், கிரிக்கெட் நட்சத்திரங்கள் ஆட்டம்



(மும்பை)

மும்பையில் சகாரா விருது வழங் கும் விழா வண்ணமயமாக நடந் தது. பாலிவுட் நடிகை கரீனா கபூர், சோனாக்ஷி சின்காவின் கவர்ச்சி ஆட்டம் ரசிகர்களை கிறங்கடித்தது. இவர்களுடன், இந்தி சுப்பர் ஸ்டார் ஷாருக்கான் மற்றும் கிரிக்கெட் வீரர் களும் கைகோர்த்துக் கொள்ள, இர வெல்லாம் ஆடல், பாடலுடன் நிகழ்ச் சிகள் களை கட்டின.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த நட்சத்திரம் உட்பட இரண்டு விருதுகளை சச்சின் தட்டிச் சென்றார்.

இந்திய விளையாட்டு அரங்கில், சிறந்த விளங்குபவர்களுக்கு சகாரா நிறுவனம் ஆண்டு தோறும் விருது வழங்கி கௌரவிக்கிறது. இரண்டா வது சகாரா விருது வழங்கும் நிகழ்ச்சி மும்பையில் நடந்தது, இதில், பாலி வுட் நடிகர் ஷாருக்கானிடம் விளை யாட்டுவீரர்கள் சிக்கிதவித்தனர். இவர் நடித்த சக்தே இந்தியா படத்தின் வச னங்களை நகைச்சுவையாக பேசும் படி ஹொக்கி வீரர்கள் ராஜ்பால் சிங், சந்தீப் சிங்கை கேட்டுக் கொண்டார்.

குத்துச்சண்டை வீரர் விஜேந்த ருடன் அளவளாவி மகிழ்ந்தார். பின், இரண்டு குழந்தைக்கு தாயான நிலையிலும் குத்துச்சண்டையில் சாதிக்கும் மேரி கோமை பாராட்டி னார். அவரைபார்த்து, தொடர்ந்து ஐந்து முறை உலக சம்பியன் பட்டம் வெல் வது சாதாரண காரியமல்ல. ஐ லவ் யு என்று ஷாருக் சொல்ல, அரங்கம் அதிர்ந்தது.

**சானியா புதுமை**

தனது கணவர் சோயிப் மலிக் குடன் பங்கேற்ற டென்னிஸ் விரான் கனை சானியா மிர்சா, தொகுப்பாளி னியாக புதிய அவதாரம் எடுத்தார். இவர் சிறிது நேரம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் தனது பிரேக் டான் சை மீண்டும் அரங்கேற்றினார். இம் முறை பட்மின்டர் நட்சத்திரங்கள் ஜுவாலா கட்டா மற்றும் அஷ்வினி பொன்னப்பாவுடன்சேர்ந்து ஆடினார்.

**சச்சின் மகிழ்ச்சி**

இந்திய அணியின் சாதனை நாயகன் சச்சின் டெண்டுல்கர், கடந்த ஆயிரம் ஆண்டுகளில் போற்று தலுக்குரிய சிறந்த நட்சத்திரம் மற் றும் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய இரண்டுவிருதுகளை கைப்பற் றினார்

இதன்போது சச்சின் கூறுகையில்,

கவாஸ்கரின் ஆட்டத்தை பார்த்து வளர்ந்தேன். எனக்கு ஊக்க சக்தி யாக இருக்கிறார். எனது 14 வயதில் வெங்கசர்க்கார் துடுப்பு ஒன்றை பரி சாக அளித்தார். இவற்றை எல்லாம் மறக்க முடியாது. தொடர்ந்து மகிழ்ச் சியுடன் கிரிக்கெட் விளையாடி வரு கின்றேன் என்றார்.

**மீனவர் கவாஸ்கர்**

விருது வழங்கும் நிகழ்ச்சியில் கவாஸ்கரின் மீனவ ரகசியம் குறித்து ஷாருக்கான் கேட்டார். இதற்கு, கவாஸ்வர் கூறுகையில்,

எனது மாமா சுதாரிக்கவில்லை என்றால், நான் கிரிக்கெட் வீரனாக ஆகியிருக்க மாட்டேன். கடந்த 1949, ஜுலை 10ஆம் திகதி பிறந்தேன். அப்போது, எனது இடது காதின் கீழ்ப்புறத்தில் சிறிய குழி இருப்ப தை மாமா பார்த்துள்ளார். அடுத்த நாள் அவர் வந்து பார்த்த போது, எனது தாய்க்கு அருகில் இருந்த குழந் தையிடம் அந்த குழி இல்லையாம். சந் தேகம் அடைந்த அவர் பிரச்சினை எழுப்ப ஆஸ்பத்திரி முழுவதும் தேடி யுள்ளனர்.

இறுதியில் மீனவப் பெண் ஒருவர் அருகில் நான் அமைதியாக தூங்கிக் கொண்டிருப்பதை கண்டுபிடித்துள் ளனர். குளிக்க வைக்கும் போது குழந் தைகளை மாற்றிய விபரம் பின்னர் தெரியவந்ததாம் என்றார்

# வீறுகொண்டெழுந்தார் அப்துல் ரஷாக்; வெற்றி பெற்றது பாகிஸ்தான் அணி

(அபுதாபி)

அப்துல் ரஷாக்கின் அதிரடி யான சதத்தின் மூலம் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் வித்தியாசத் தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த் தியது.



இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரை பாகிஸ்தான் அணி 1:1 என்ற கணக்கில் சமனிலை யாக்கியது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகள் மோதும் 2 இருபது–20, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் இருபது–20 தொடரை தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற முதலா வது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொட ரில் 1:0 என்ற கணக்கில் முன்னி லை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் விளையாடாத நிலை யில் அணிக்கு போத்தா தலைமை வகித்தார்.

இப்போட்டியில் நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்கா இங்ரா மின் சிறப்பான சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையி ழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இங்ராம் 119 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 100 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 62 பந்துகளில் (8 பவுண்ட ரிகள் உட்பட) 65 ஓட்டங்களையும் டுமினி 43 பந்துகளில் (3 பவுண் டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வகாப் றியாஷ், சகிட் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட் டுக்களையும் அக்தர், ரஷாக், ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை யும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 287 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்து தாடிய பாகிஸ்தான் அணி 29.2 ஓவர் களில் 136 ஓட்டங்களை எடுத்து 5 விக் கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் தொடர்ந்து வந்த அப் துல் ரஷாக் சிறப்பாக ஆடி அணி யை சரிவிலிருந்து மீட்டார்.

மறு முனையில் பொறுப்பாகத் துடுப்பெடுத்தாடிய பாவாட் அலாம் 68 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களை எடுத்து ஆட் டமிழக்க பாகிஸ்தான் அணி 41.5 ஓவர்களில் 217 ஓட்டங்களை மாத் திரமெடுத்து 6 விக்கெட்டுக்களை யிழந்து தடுமாறியது.

அடுத்து வந்த ஹய்டர் 6 ஓட்டங் களும் றியாஷ் பூச்சியம் மற்றும் அஜ் மல் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

எனினும் தனித்து நின்று போ ராடிய அப்துல் ரஷாக் 70 பந்துகளில் சதமடித்து அசத்த பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை யிழந்து 289 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அப்துல் ரஷாக் ஆட்டமி ழக்காமல் 72 பந்துகளில் (7 பவுண்ட ரிள், 10 சிக்ஸர்கள்) 109 ஓட்டங்களையும் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பாவ்வெல்ட் 3 விக் கெட்டுக்களையும் ரிசொற் சோபி, பீற் றர்சன், போத்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர் இப்போட் டியில் பாகிஸ்தான் அணியின் வெற் றிக்கு திருப்பு முனையமைத்த அப்துல் ரஷாக் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# தென்னாபிரிக்க அணியை சிமித், கலிஸ் அழித்துள்ளனர்

## கிப்ஸ் புத்தகத்தில் பரபரப்பு




தென்னாபிரிக்க முன்னணி வீரர் கிப்ஸ் தனது வாழ்க்கை வரலாறு பற்றி புத்தகம் எழுதியுள்ளார். அந்தப்புத் தகம் நேற்று வெளியானது. இப்புத் தகத்தில் இடம்பெற்றுள்ள தகவல்கள் பரபரப்பைக் கூட்டியுள்ளது. அதில் கூறியிருப்பதாவது,

தற்போதைய தென்னாபிரிக்க அணி பிளவுபட்ட அணியாகக் காணப்படு கிறது. சிமித், கலிஸ், பவுச்சர் ஏன்? தற் போது அணிக்கு வந்த டி விலியர்ஸ் ஆகியோர் அணிவீரர்களை தங்கள் ஆதரவாளர்களாக மாற்றி வைத்துள் ளனர்.

இதனால் ஒன்றுபட்டு விளையாடுவது இல்லாமல்போய்விட்டது. அணியில் சிமித் மிகவும் அதிகாரம் மிகுந்தவராகக் காணப்படுகிறார்.

மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப்பய ணத்தின் போது அப்படியுமிப்படி யுமாக அனைத்து வீரர்களும் உல்லாசமாக இருந்துள்ளனர். குரோனியே மறைவுக்குப் பின்னர் அணியைக் கட்டிக்காக்கும் பொறுப்பு பொலக்கிற்கு வந்தது. அற்புதமான அணியை வைத்திருந்த குரோனியேயின் வழியை பொலக்கால் சரிவரப் பின்பற்ற முடியவில்லை. இருப்பினும் அவர் தன்னால் முடிந்ததைச் செய்தார்.

இந்தத்தகவல் உள்பட பல இரகசியங்கள் அதில் கூறப்பட்டிருப்பதால் புத்தகம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாலைதீவுக் கடலில் மீன்பிடிக்க சென்ற போது காணாமல் போயிருந்த குருநகர் மீனவர் மன்னார் கற்பிட்டிக் கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளதாக தெரியவருகிறது.

குருநகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரான்சிஸ் றோமானியஸ் (வயது 35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இவர் கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழிலுக்குச் சென்ற போது காணாமல் போயி ருந்தார்.

(ச–5)

## சிறுபான்மை கட்சிகளை...

ளார்.

இந்த உள்ளூராட்சி தேர்தல் சட்ட மூலம் எதிர்காலத்தில் ஒட்டுமொத்தமாக சிறுபான்மை பிரதிநிதித்துவங்களை வெட்டி குறைக்கப்படவிருக்கும் அபாயத்திற்கு எதிர்வு கூறுகின்றது என நான் கூறுகின்றேன்.

இன்றைய நாடாளுமன்றத்தில் இல்லாத நான் இதை சொல்லத் தான் முடியும். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் செயற்பட வேண்டும். இன்று நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளிடம் இச் சட்டமூலம் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும், கட்சி பேதங்களை மறந்து இந்த சதி முயற்சிகளை தடுத்து நிறுத்துமாறும் கோருகின்றேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஆளுநர் அலவி மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்லாம் ஆகியோரது பங்குபற்றலுடன் சட்டத்தரணி இஸ்மாயில் தலைமையில் கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்ற சுயாதீன தேசிய முன்னணியின் 8ஆம் வருடாந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

உத்தேச சட்டமூலத்தில் 5 விகித வெட்டுப் புள்ளி அறிமுகமாகின்றது. அதாவது போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் குறைந்த பட்சமாக 5 விகித வாக்குகளை பெற்றிருந்தாலேயே கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

கடந்த காலத்திலும் இத்தகைய வெட்டுப் புள்ளி அறிமுகப்படுத்தப்படும் அபாயம் இருந்தது. அவ்வேளையில் அதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் மறைந்த அஷ்ரப்பின் ஆளுமையுடன் தடுத்து நிறுத்தியிருந்தார்.

இன்றைய தேர்தல் முறை விகிதாசார முறைமையாகும். கடந்த காலங்களில் தொகுதி முறைமை இருந்தது. இன்றைய புதிய முறைமையை கலப்பு முறை என்று கூறுகிறார்கள்.

இதில் வட்டாரங்கள் மூலமாக எழுவது விகித பிரதிநிதிகளும், விகிதாசாரம் மூலமாக 30 விகித பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவார்கள். இந்த 30 விகித விகிதாசார பிரதிநிதித்துவம் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் முறைமையை சிறுபான்மை அரசியல் கட்சிகள் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

தேர்தலின் போது வட்டாரங்களின் மூலமாக வெற்றிபெறும் வேட்பாளர்களின் வாக்குத் தொகைகளை கழித்து விட்டு, தெரிவுசெய்யப்படாத வேட்பாளர்களின் வாக்குத் தொகைகள் சேகரிக்கப்படும். அந்த தொகைகள் வேட்பாளர்களின் கட்சிகளுக்கு வழங்கப்படும்.

இதன் மூலமே இந்த 30 விகித விகிதாசார தெரிவு நடைமுறையாகின்றது. இச்சந்தர்ப்பத்தில்தான் 5 விகித வெட்டுப்புள்ளி சிறுபான்மை கட்சிகளைப் பாதிக்கின்றது.

ஏனெனில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 விகித வாக்குகளை பெறாத வேட்பாளர்களின் வாக்குகள் இந்த கணக்கெடுப்பில் சேர்த்து கொள்ளப்படாது.

இதனால் சிறுபான்மை கட்சிகளின் வாக்குத்தொகை கணிசமாக குறையும். ஆகவே நேரடியாக வட்டாரங்களின் மூலமாக வெற்றி பெற முடியாத சிறுபான்மை வேட்பாளர்கள் விகிதாசார முறையின் கீழும் தெரிவு செய்யப்பட முடியாத நிலைமை ஏற்படும். இது சிறுபான்மை கட்சிகளையும், சிறிய கட்சிகளையும், சுயேட்சைக் குழுக்களையும் வெகுவாக பாதிக்கும்.

சிறிய கட்சிகளுக்கான அரசியல் பிரவேசத்தை இல்லாதொழித்து விட்டு பெரும்பான்மை கட்சிகளை மாத்திரம் வாழ வைக்கும் சதித்திட்டமே இந்த புதிய தேர்தல் முறை சட்டமாகும்.

சிறுபான்மை கட்சிகளுடன் கட்டாயமாக கூட்டு சேர்வது என்பது வேறு. பலவந்தமாக கூட்டு சேர்க்கப்படுவது என்பது வேறு. இச்சட்ட மூலம் பெரும்பான்மை கட்சிகளுடன் கட்டாயமாக கூட்டு சேரவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை சிறிய கட்சிகளுக்கு ஏற்படுத்துகின்றது என்றார். (ச-5)

## அரசாங்...

பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதனை விடவும் அவர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டுமாயின் மன்னிப்பு கோர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்ற அமைச்சர்கள், கிழக்கில் பொலிஸார் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) மன்னிப்பு கோர வேண்டும் என பிள்ளையான் அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் மௌனம் காத்து வருகின்றனர். அரசு பெறும் கடன்கள் மக்களைத் தாக்கப்போகின்றன என அவர் கூறினார். (ச-5)

## பிரபாகர...

மனித வெடிகுண்டு ஒன்றினால் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர் முதலாம், இரண்டாம் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தார்கள்.

தற்போது பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் மீளப் பெறப்பட்டுள்ள போதிலும் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு விஷேட நீதிமன்றத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## தமிழ் அரசியல் கைதி...

செய்யப்பட்டு கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தான் பல தடவைகள் தனது விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பம் செய்தும்; ஆனால் இதுவரை தனது விடுதலை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அதேநேரம் தனது மூன்று குழந்தைகளும் மனைவியும் விசுவமடு 12ஆம் கட்டை புனர்வாழ்வு முகாமில் உள்ளதாகவும் இவர்களைப்பராமரிப்பதற்கும் பிள்ளைகளைப்படிப்பிப்பதற்கும் தனது மனைவியால் முடியாமல் இருப்பதாகவும் இதனால் தன்னை விடுதலை செய்து தனது பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமைவதற்கு உதவிசெய்ய வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

தனது இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை தான் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவரின் மனைவி மேரிலூசியா வயது 37, குழந்தைகள் மெரிசலா (பெண்) வயது 10, தரிசலா (பெண்) வயது 08, நிர்மலன் (ஆண்) வயது 02 என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ச-5)

## விலைவாசி உயர்வை...

அரசாங்கம் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியது.

அதாவது, தற்போது யுத்தம் நடைபெற்றுகொண்டிருப்பதால் பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது எனவும் பொருளாதாரம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது எனவும்,

யுத்தம் முடிபுற்ற பிறகு பொருட்களின் விலை குறைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு மற்றும் வரிவிதிப்புகள் குறைக்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால் தற்போது ஜனாதிபதி ராஜபக்ஷவின் கூட்டரசாங்கம் எவ்வித வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை.

யுத்தம் இடம்பெற்றதால் எல்லா பாரங்களையும் மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். தற்போது பொருளாதாரத்தை நோக்கமாகக் கொண்டு செயற்பட முடியாது என அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் யுத்தம் முடிபடைந்து 17 மாதங்களாகியும் மக்களின் வாழ்க்கைச் செலவு இதுவரையிலும் குறைக்கப்படவில்லை.

இலங்கையின் சனத்தொகையில் 41.6 சதவீதமானவர்களின் நாளாந்த வருமானம் 2 டொலர்களுக்கும் குறைவானதாகும். இல்லாவிடின் நாளாந்தம் 226 ரூபாயாகும்.

அதுமட்டுமின்றி பிறக்கும் குழந்தைகளில் 29.4 வீதமானவர்கள் நிறை குறைந்தவர்களே. குறைந்த வருமானம் பெறுபவர்களில் இருபது சதவீதமானவர்கள் தேசிய வருமானத்தில் 4.6 வீதம் வருமானத்தையே பெறுகின்றனர்.

இதனால் மூன்றுவேளை உண்ண வேண்டிய உணவு இரண்டு வேளையாகக் குறைக்கப்பட்டுவிட்டது.

எனவே நாட்டில் தற்போது காணப்படும் பொருட்களின் விலை உயர்வு, வரிவிதிப்பு அதிகரிப்பு ஆகியவற்றுக்கு சிறந்த தீர்வை பெற்றுத் தரவேண்டும். இவ்வாறு அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ச-5)

## வேலையில்...

தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளில் வேலையில்லாப் பட்டதாரிகள் தொழில் கிடைக்கும் வரையில் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிலவேளைகளில் ஹோட்டல்களில் வெயிட்டர்களாகவும் கூலித் தொழிலாளர்களாகவும் வெளிநாடுகளில் பட்டதாரிகள் பணியாற்றுவதாகவும் அதனை அவர்கள் இழிவாகக் கருதவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தராதரம் பாராது தமக்கு வழங்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் பல பட்டதாரிகள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வெளிநாடு சென்று கூலி வேலைகள், பத்திரிகை விநியோகம் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர் கந்தையா குலசிங்கம்



மடியிலையாக 13 06 1931

அமரராக 03 10 2010

எங்கள் அன்புத்தெய்வமே! - நாள்கள் எத்தனை சென்றாலும் பசுமையான உங்கள் நினைவுகள் மட்டும் எம்மிடமிருந்து எந்நாளும் அகலாது

உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

15, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

(2785)

# காணி தேவை

நாவற்குழி - கைதடி ஆகிய இடங்களை உள்ளடக்கி A-9 வீதியில் 10 தொடக்கம் 15 பரப்புக்காணி உடன் தேவை.

தொடர்புகளுக்கு :-
0776067559

(இ)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமிகு சோ.குகதாச சர்மா அவர்களின் அன்பு மாமனார்



பிரம்மஸ்ரீ பிக்ஷாடனக் குருக்கள் சோமசுந்தரக்குருக்கள்

அவர்களின் ஆத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளில் சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

யா/திருநெல்வேலி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை, திருநெல்வேலி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(இ)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.